பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 27 செவ்வாய்க்கிழமை 13.10.2020 கதிர் 338

### இனி இது ரகசியம் அல்ல!

'வளர்த்த கடா மார்பில் பாய்கிறது' என்பார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அதுதான் நிலைமை போலும்.

இருபதாவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக தெற்கில் பௌத்த மத பீடங்கள் மற்றும் முக்கிய அரசுத்

பக்கம்02 »

## உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பால் அரசு மீதான மக்களின் நம்பிக்கைக்குப் பாதிப்பு ஏற்படாது

### '20'ஐ திருத்தியமைப்போம் என்கின்றது ராஜபக்ஷ அரசு

அரசுமீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றக் குழு விவாதத்தைத் தொடர்ந்து திருத்தம் செய்யப்படும். உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை முழுமையாகச் செயற்படுத்துவோம்.

– இவ்வாறு ராஜபக்ஷ அமைச்சரவையிலுள்ள துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பல் துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது

பக்கம் 02 »

## அதிகரிக்கும் சமூகத் தொற்று நேற்றும் 92 பேர் அடையாளம்

நாட்டில் மேலும் 92 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் மினுவாங்கொடை கொரோனா கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் மினுவாங்கொடை கொத்தணிப் பரவலுடன் தொடர்புடைய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் 1,399 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால்

பக்கம் 02 »

# கட்டுக்கடங்காத 'கொரோனா' கடுமையாக்கப்படும் ஊரடங்கு

### அத்தியாவசிய சேவைகள் நிறுவனங்களையும் மருத்தகங்களையும் கூட மூடுவதற்கு உத்தரவு



**மினுவாங்கொடைக் கொத்தணி கொரோனாத் தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு நடைமுறை கடுமையாக்கப்படுகின்றது எனப் பொலிஸ் பேச்சாளரும் பிரதப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.**

**ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுகளில் எதிர்வரும் சில தினங்களுக்கு ஊரடங்கு உத்தரவு கடுமையாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.**

பக்கம் 02 »

## யாழ்.ஆய்வுகூடப் பரிசோதனை: 6 பேருக்கு கொரோனா வைரஸ்!

யாழ்.ஆய்வுகூடப் பரிசோதனையில் 6 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.ஆய்வுகூட பரிசோதனையின் நாளாந்த (12ஆம் திகதி) அறிக்கை மூலம் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர்

பக்கம் 02 »



## எனக்கு நீதியைப் பெற்றுத் தாருங்கள்; ஜனதிபதிக்கு ரியாஜ் பதியுதீன் கடிதம்

அரச மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், எனது விடுதலையை அரசியல் இலாபங்களுக்காகப் பயன்படுத்துகின்றார்கள் என்பது கவலையான விடயமாகும். ஆகையால், எனது விடயத்தில் நீங்கள் தலையிட்டு, நான் எப்போதும் அரசியல் மற்றும் பயங்கரவாதத்திலிருந்து விலகிச் செல்லும் உறுதியுடன் இருக்கும் ஒரு நபர் என்பதால், எனக்குக் கிடைக்க வேண்டிய நீதியைப் பாதுகாக்க தேவையான

பக்கம் 02 »

## '20'க்கு எதிராக பௌத்த பீடங்கள் திடீர் கிளர்ச்சி!

### நாட்டை சர்வாதிகாரத்திடமிருந்து காப்பாற்ற அதை தோற்கடியுங்கள்

### அமரபுர, ராமன்ய பீடங்கள் கோரிக்கை

கொழும்பு, ஒக்.12

கோட்டாபய அரசு கொண்டு வரும் அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்துக்கு எதிராக பௌத்த மத பீடங்கள் திடீரெனக் கிளர்ந்துள்ளன என்ற செய்தி கொழும்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

சர்வாதிகாரத்துக்கு வழிசெய்யும் இந்த அரசமைப்புத் திருத்த முயற்சிகளைத் தோற்கடிக்குமாறு பௌத்தத்தின் நான்கு பிரதான மத பீடங்களில் இரண்டான அமரபுர பீடமும், ராமன்ய பீடமும் நேற்று பகல் பகிரங்க செய்தியாளர் மாநாடு கூட்டி, அறிக்கை வெளியிட்டு அரசியல் தலை

பக்கம் 02 »

## ஸ்ரீ லங்கன் விமான சேவை ஊழியருக்கும் கொரோனா

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சரக்குப் பிரிவில் பணியாற்றி வரும் ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: –

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சரக்குப் பிரிவில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு நேற்றுக் காலை பி.சி.ஆர். பரிசோதனை

பக்கம் 02 »

## இலங்கையர்களை அழைத்து வருதல் இடைநிறுத்தம்; தனிமைப்படுத்தல் நிலையங்களில் இடப்பற்றாக்குறை

வெளிநாட்டில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதற்கு வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் கொரோனா நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வைத்தியசாலைகளில் நிலவும் இடப்பற்றாக்குறையும் இதற்கொரு காரணமாகும் எனவும் அவர்

பக்கம் 02 »

## ஆணைக்குழுவில் மைத்திரி 6 மணி நேரம் வாக்குமூலம்!

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன 6 மணித்தியாலங்களுக்கும் அதிகமாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் நேற்று வாக்குமூலம் அளித்தார்.

குறித்த ஆணைக்குழுவின் அழைப்புக்கிணங்கவே அவர் அங்கு முன்னிலையாகியிருந்தார்.

இதேவேளை, நாளையும் குறித்த ஆணைக்குழுவில் மீண்டும் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்புகளில் இருந்து எழுந்திருக்கும் கிளர்ச்சி ஒரு வகையில் ராஜபக்ஷக்கள் எதிர்பாராத அதிரடி வைத்தியம்தான்...!

இதில் விசேடம் என்னவென்றால், இருபதாவது திருத்தத்தை நிறைவேற்ற இடமளிக்க வேண்டாம், அது சர்வாதிகாரம் மீண்டும் தலைவிரித்தாட இடமளித்து விடும் என்ற எச்சரிக்கை நிலைப்பாட்டை நான்கு பௌத்த பீடங்களும் தாமாகவே தீர்மானித்து, எடுத்திருக்கின்றமைதான்.

மல்வத்தை, அஸ்கிரிய, அமரபுர, ராமன்ய ஆகிய நான்கு பீடங்களையும் சேர்ந்த மதத் தலைவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னரே இந்தத் திருத்தம் நடைமுறைக்கு வருகின்றமையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவைத் தொடர்புகொண்டு கோரியிருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

வழமையாகவே பௌத்த மத பீடங்களுடன் மிகுந்த நெருக்கமான தொடர்புகளைக் கொண்டவர் கரு ஜயசூரிய என்பதும் தெரிந்ததுதான்.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்த பின்னர் தங்கள் நிலைப்பாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்துவதாக பௌத்த பீடத் தலைவர்கள் தெரிவித்திருந்தனராம்.

அதன்படி, அமரபுர மற்றும் ராமன்ய பீடங்களின் தலைவர்கள் கூட்டாக இருபதாவது திருத்தத்துக்கு எதிராகப் பகிரங்க அறிக்கை விடுத்துள்ளனர். வழமையாக இந்த இரண்டு பீடங்களும் சேர்ந்து செயற்படுகின்றமை தெரிந்ததே.

அதேபோன்றுதான் அஸ்கிரிய, மல்வத்தை பீடங்களும். இந்த பீடங்களில் ஒன்றின் மகா நாயக்கரே நேரடியாக கரு ஜயசூரியவிடம் இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றாமல் தடுக்க நடவடிக்கை எடுங்கள் என்று அன்புக் கட்டளையிட்டிருக்கின்றார் என அறியவந்தது.

எனவே அடுத்து வரும் தினங்களில் மற்றைய இரு பீடங்களின் கூட்டறிக்கை – இருபதாவது திருத்தத்தை நிராகரிக்க கோரும் வேண்டுகோள் – வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்வதற்கு அதீத ஈடுபாடுகாட்டி உழைத்த வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர், எல்லே குணவங்ஸ தேரர், மெதகொட அபே திஸ்ஸ தேரர் போன்ற முன்னணி பௌத்த தலைவர்கள், இருபதாவது திருத்தத்தின் மூலம் எதேச்சாதிகார வலிமையைப் பெற முயற்சிப்பதன் மூலம் தங்கள் முதுகில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குத்தி விட்டார் எனக் கருதுகின்றனர். தாங்கள் அரசியலில் வளர்த்துவிட்ட கடா தங்கள் மார்பில் பாய்கின்றது என்ற வேதனை அவர்களுக்கு.

அதேநேரம், மறுபுறத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அதே போன்ற நிலைமைதான்.

ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு வியூகம் அமைக்க என அவர் ஸ்தாபித்த 'எலிய', 'வியத்மக' போன்ற அமைப்புகளின் பிரமுகர்களே இருபதாவது திருத்த விடயத்தில் இப்போது அவருக்கு எதிராகக் கொம்பு சீவிக் கொண்டு நிற்கின்றார்களாம்.

'எலிய' அமைப்பைச் சேர்ந்த கவிந்த குமாரதுங்க என்பவரைத் தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக்கினார் கோட்டாபய. கடந்த வாரம் அலரிமாளிகையில் இருபதாவது திருத்தம் தொடர்பாக நடைபெற்ற ஆளும் தரப்பு எம்.பிக்களின் கூட்டத்தில் அதிகம் கோட்டாபயவுடன் இருபதாவது திருத்தம் குறித்து வாய்ச்சவடால் பண்ணியவர் அவர்தானாம். ஒரு கட்டத்தில் *'பேச்சை நிறுத்தி விட்டு இரும்!'* – என்று கோட்டாபய உத்தரவிடும் அளவுக்கு நிலைமை போனதாகவும் தகவல். அதே போன்றுதான் 'வியத்மக'வைச் சேர்ந்த தொளவத்த என்ற சட்டத்தரணியும் இருபதாவது திருத்த விடயத்தில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக சீறுகின்றார் என்று கூறப்படுகின்றது.

எனக்கு என்னவோ *'வளர்த்த கடா மார்பில் பாயும்'* விளையாட்டு பெரமுனக் கட்சிக்குள் மட்டும் அடங்கிய விடயமல்ல, ராஜபக்ஷக்களின் வீட்டுக்குள்ளிருந்தும் அது வந்திருக்கலாம் என்ற சந்தேகம் உண்டு.

இதில், வளர்த்தவர் யார், கடா எது என்பதை நான் கூறப் போவதில்லை. வாசகர்களாகிய நீங்களே அதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்...!

– மின்னல் –

## இலங்கையர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் இலங்கையர்கள் 14 நாள்களுக்குக் கட்டாயமாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கைக்கு வருகை தருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள விமானங்களின் நேர அட்டவணை எதிர்காலத்தில் மாற்றியமைக்கப்பட்டு, வெளிநாடுகளில் சிக்கியிருக்கும் இலங்கையர்களை அழைத்து வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுவரையில் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தருவதற்கு 57 ஆயிரத்துக்கும் அதிகளவானோர் விண்ணப்பித்துக் காத்திருக்கின்றனர்.

## உயர்நீதிமன்றத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: –

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் எதிர்க்கட்சியினர் ஆரம்பத்தில் இருந்து சமூக மட்டத்தில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவித்து வருகின்றார்கள். 19 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இவ்வாறான விமர்சனங்கள் எழுவதற்குக்கூட அப்போதைய அரசு காலவகாசம் வழங்கவில்லை. திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு இறுதியில் யார் பொறுப்பு என்பதுகூடக் கேள்விக்குறியாக்கப்பட்டது.

19 ஆவது திருத்தச் சட்டம் குறுகிய அரசியல் நோக்கங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதால் அரச நிர்வாகம் பலவீனமடைந்தது. நாட்டு மக்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை வெறுத்ததன் காரணமாகவே கடந்த அரசை முழுமையாகப் புறக்கணித்தார்கள்.

19 வது திருத்தத்தின் குறைபாடுகளுக்கும், அரச நிர்வாகத்தைப் பலப்படுத்தும் ஒரு தீர்வாகவே அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் ஒரு தற்காலிக ஏற்பாடாக உருவாக்கப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பை உருவாக்குவதே அரசின் பிரதான இலக்காகும்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் உயர்நீதிமன்றின் நிலைப்பாடு எதுவாக இருந்தாலும் அதனைச் செயற்படுத்துவோம். வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் குழு நிலை விவாதத்தைத் தொடர்ந்து திருத்தம் செய்யப்படும் என்பதில் உறுதியாக உள்ளோம் – என்றார்.

## கட்டுக்கடங்காத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட நகரங்களில் இன்றும், நாளையும், நாளைமறுதினமும் மருந்தகங்கள் மற்றும் அத்தியாவசிய சேவை நிறுவனங்கள் மூடப்படும் எனவும் அவர் அறிவித்தார்.

அத்துடன், ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் மாத்திரமின்றி நாட்டின் ஏனைய பகுதிகளில் வசிப்பவர்களும் தங்களுடைய பிரயாணங்கள் உள்ளிட்ட நடவடிக்கைகள் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

## அதிகரிக்கும் சமூகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 844 ஆக உயர்வடைந்துள்ளது. அதில் 3 ஆயிரத்து 317 பேர் குணமடைந்துள்ளனர். 1,514 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 306 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

## யாழ்.ஆய்வுகூடப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நேற்று (12) வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் 320 பேருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இயக்கச்சி தனிமைப்படுத்தல் முகாமைச் சேர்ந்த 6 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களைத் தவிர ஏனையோருக்குத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றுள்ளது.

## ஸ்ரீ லங்கன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகளுக்கு அமைய, குறித்த ஊழியருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஊழியர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர். தற்போது அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உரிய சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த ஊழியர், வெளிநபர் ஒருவரிமிருந்து தொற்றுக்குள்ளானார் என்று நம்பப்படுகின்றது.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள குறித்த ஊழியருடன் பணியாற்றி வந்த 50 பேர் இதுவரையில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, முடிவுகளுக்காகக் காத்திருக்கின்றனர்.

குறித்த நிறுவனத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் வகையில், கொரோனாத் தடுப்பு தொடர்பான அரச சுகாதார பாதுகாப்புப் பிரிவின் ஆலோசனைகளுக்கு அமைய, தமது பணியாளர்கள் ஒவ்வொருவரையும் பாதுகாப்பதற்கு ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. சுகாதார மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் தொடர்ந்து பணியாற்றி வருகின்றது – என்றுள்ளது.

(மற்றொரு செய்தி 7ஆம் பக்கதில்)

## '20'க்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களையும் பொதுமக்களையும் கோரியிருக்கின்றன.

பௌத்தத்தின் மற்றைய இரு மத பீடங்களான அஸ்கிரிய பீடமும், மல்வத்தை பீடமும் கூட இந்த நிலைப்பாட்டைக் கைக்கொள்ளக் கூடும் என விடயமறிந்தவட்டாரங்கள் ஊகம் தெரிவித்தன.

கோட்டாபயவை ஜனாதிபதி பதவிக்கும் பொதுஜன பெரமுனவை ஆட்சிப் பீடத்துக்கும் கொண்டு வருவதற்கு அயராது உழைத்த நாரஹன்பிட்டிய அபேராம விஹாரையைச் சேர்ந்தவரும், 'துறவிகள் குரல்' அமைப்பின் தலைவருமான முருத்தெட்டுவேகம ஆனந்த தேரர், வெல்லம்பிட்டிய விகாராதிபதி மெதகொட அபேதிஸ்ஸ தேரர், எல்லே குணவங்ஸ தேரர் போன்ற பலரும் அண்மைக் காலத்தில் இருபதாவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராகக் கடுமையான கண்டனங்களை பகிரங்கமாக வெளியிட்டு வரும் சமயத்திலேயே, நேற்று பகல் அதிரடிக் காய் நகர்த்தலாக அமரபுர மற்றும் ராமன்ய பீடங்களின் சார்பில் அவற்றின் செயலாளர்கள் செய்தியாளர்கள் மாநாடு கூட்டி, இது தொடர்பான பகிரங்க அறிவிப்பை விடுத்தனர். இரண்டு மத பீடங்களினதும் சார்பில் ஒப்பமிடப்பட்ட கூட்டறிக்கை அங்கு வெளியிடப்பட்டது.

அரசமைப்பின் இருபதாவது திருத்தத்துக்கான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவை நாடாளுமன்றத்தில் பெறுவதற்குத் தீவிரமாக முயற்சித்து வரும் கோட்டாபய அரசுக்கு பௌத்த பீடங்களின் திடீர் கிளர்ச்சி பெரும் பின்னடைவு என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## எனக்கு நீதியைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் என நான் நம்புகின்றேன்.

– இவ்வாறு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சுமார் ஐந்தரை மாத சிறை விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்ட ரியாஜ் பதியுதீன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:-

கொழும்பு வர்த்தகர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவராக இருந்த முஹம்மது இப்ராஹிமின் மகனான இன்ஷாப் அஹமதுடன் நான் தொலைபேசி தொடர்பு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், கடந்த 2020 ஏப்ரல் 14 ஆம் திகதி புத்தளத்தில் உள்ள எங்கள் இல்லத்தில் வைத்து குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் (சி.ஐ.டி) கைது செய்யப்பட்டிருந்தேன் என்பது ஜனாதிபதியாகிய உங்களுக்கு நன்கு தெரியும்.

இன்ஷாப் அஹமட் என்பவர், எனது சொந்த ஊரான மன்னாரைச் சேர்ந்த மற்றொரு முக்கிய தொழிலதிபரான எஸ்.கே.பி.அலாவுதினின் மகளைத் திருமணம் செய்துகொண்டார்.

இதையடுத்து, நான், சி.ஐ.டியினரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தேன். நான் கைது செய்யப்பட்ட அதே நாளில், இன்ஷாப்அஹமதுடன் தொலைபேசி உரையாடல்கள் நடாத்தினார்கள் என்ற அடிப்படையில், மேலும் 06 பேரும் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதை உங்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

2020 ஏப்ரல் 14 ஆம் திகதி நான் உட்பட கைதுசெய்யப்பட்ட 07 பேரில் 03 பேர் எனக்கு முன் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் முபீன் மற்றும் அமானுல்லா ஆகியோரை விடுவிக்குமாறு கோரி, 01.06.2020 தினத்தன்று சி.ஐ.டியினர் நீதிமன்ற உத்தரவையும் கோரியிருந்தனர். இதன்போது, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட எவராவது ஒருவர், விசாரணையின் பின்னர், அவர் மீது குற்றங்கள் ஏதும் நிரூபிக்கப்படாவிட்டால், அவரை விடுவிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இல்லை என்ற காரணத்தால், அவர் நிரபராதியாக இருந்தால், கைதுசெய்த சி.ஐ.டி யினர் அவரை விடுவித்துவிட்டு, நீதிமன்றத்துக்கு அந்த விடயத்தை தெரியப்படுத்தினால் போதுமானது என்று நீதிவான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தார்.

அனைத்து விசாரணைகளின் முடிவுகளையும் தொடர்ந்து, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் எனக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று சி.ஐ.டியினர் பரிந்துரைத்ததின் பேரில், மேற்கண்ட நீதிமன்ற உத்தரவின்படி 29.09.2020 தினத்தன்று நான் விடுவிக்கப்பட்டிருந்தேன்.

நான் தடுப்புக்காவலில் இருந்த காலப்பகுதியில், எனது தொலைபேசிகள், கணனிகள், வியாபாரத் தளங்கள் மற்றும் வங்கிக் கணக்குகள் தொடர்பான முழுமையான விசாரணையை சி.ஐ.டி.யினர் மேற்கொண்டிருந்தனர். மேலும், கொழும்பில் உள்ள எனது வீடு, புத்தளத்தில் உள்ள எனது மனைவியின் பெற்றோருக்குச் சொந்தமான வீடு இன்னும் நாட்டின் பல பகுதிகளில் உள்ள எனது நண்பர்களின் வீடுகள் மற்றும் மன்னாரில் உள்ள எனது தாய்க்குச் சொந்தமான வீடு போன்றவற்றிலும் சி.ஐ.டியினர் தேடுதல்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் இது தொடர்பில் எனது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் என்னுடன் வணிகத் தொடர்புகளில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டிருந்தமையும், எனது விடுவிப்பின் பின்னர் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

எனது சகோதரர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாத் பதியுதீன் அரசியல்வாதி என்பதனால், எனது பிரச்சினையை அரச மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள், அவர்களது அரசியல் நலனுக்காக எனது விடுதலையை பயன்படுத்திக்கொள்கின்றார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இது நான் உட்பட எனது குடும்பத்தினரது பொது வாழ்க்கைக்கு மிகப் பெரிய தொரு தடையாக உள்ளத்து.

இரண்டு தினங்களுக்கு முன்னர், ஆளுங்கட்சியின் நூறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர். அதில் என்னை மீண்டும் கைதுசெய்து விசாரிக்குமாறும் கோரியுள்ளனர்.

எவ்வாறாயினும் சில அரசியல் மற்றும் குரோத உணர்வுடைய மதவாதிகள், இனவாதிகள் தமது சொந்த நலன்களை அடைந்துகொள்ள மேற்கொள்ளும் முயற்சியாகவே இது உள்ளது. அத்துடன், சி.ஐ.டியினரது நடத்தையை சந்தேகத்துக்குரியதாக சித்திரிக்கவும், எந்த அடிப்படையும் இல்லாமல் என்னை ஒரு பயங்கரவாதியாக இழிவுபடுத்தவும் இந்த முயற்சியை நான் கருதுகிறேன்.

பக்கம் 11 >>>

# மீளவும் ஊடக அடக்குமுறை புதிய வடிவில் முல்லை. முறிப்பு தாக்குதலுக்குக் கண்டனம்

## யாழ்.ஊடக அமையம் தெரிவிக்கின்றது

யாழ்ப்பாணம்,ஒக்.13

முல்லைத்தீவு முறிப்பு பகுதியில் சட்ட விரோத மரக்கடத்தல் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களும் யாழ்.ஊடக அமைய சிரேஷ்ட உறுப்பினர்களுமான சண்முகம் தவசீலன் மற்றும் கணபதிப்பிள்ளை குமணன் உள்ளிட்ட இருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை யாழ்.ஊடக அமையம் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

இது தொடர்பாக யாழ். ஊடக அமையத்தின் தலைவர் ஆ.சபேஸ்வரன் செயலாளர் சி.நிதர்சன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

அதே வேளை மீண்டும் அரங்கேறும் ஊடக வன்முறை தொடர்பில் தனது அச்சத்தையும் யாழ்.ஊடக அமையம் பகிர்ந்தும் கொள்கின்றது.

ஏற்கனவே வடகிழக்கில் ஊடக சுதந்திரம் கடந்த காலங்களில் எவ்வாறு அரசினால் பேணப்பட்டதென்பது சொல்லி தெரியவேண்டியதொன்றல்ல.

எமது சக ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் 39பேரினது உயிர்களை ஈகம் செய்தே தமிழ் தேசத்தில் ஊடகப் பணி முன்னெடுக்கப்படுகின்றது.

ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டும், விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களால் ஊடகவியலாளர்கள் பலரும் நாட்டை விட்டு வெளியேறும் சூழலே முன்னைய காலங்களில் இருந்து வந்திருந்தது.

ஊடகப்படுகொலைகளிற்கு யுத்த காலத்தை காரணங்காட்டி வந்திருந்த ஆட்சியாளர்களிற்கும் அவர்களது முகவர்களிற்கும் முல்லைத்தீவு முறிப்பு பகுதியில் சட்டவிரோதமான முறையில் தேக்கு மரங்கள் வெட்டப்படுவது யுத்த காலச் சூழல் இல்லையென்பது தெரியாமலிருக்க வாய்ப்பில்லை.

தாக்குதல் நடத்தியவர்கள் இலங்கை வன வளத் திணைக்களம் மற்றும் இலங்கை பொலிஸாரின் ஆதரவுடனேயே இந்த மரக்கடத்தலில் ஈடுபட்டமையை தாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் உறுதியாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை தேசிய மரக்கூட்டுத்தாபனம் ஒன்றின் உப ஒப்பந்ததாரராகிய பெரும்பான்மை இனத்தினைச் சேர்ந்த நபரொருவரது நிறுவனம் ஒன்றுக்கான மரம் ஏற்றும் நடவடிக்கையை மேற்கொண்டுவரும் குறித்த குழு தமக்கு காப்பரணாக குறித்த நிறுவத்தினையும் மரக்கூட்டுத்தாபனத்தினையும் பயன்படுத்தி வந்திருக்கின்றதென்பதையும் ஊடகவியலாளர்கள் அம்பலப்படுத்தியுள்ளனர்.

மீண்டும் ஊடகவியலாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அரச இயந்திர ஆதரவுடனான தாக்குதல்கள் நிச்சயமாக மகிழ்ச்சியான சூழலொன்றை எதிர் வருங் காலங்களில் நிச்சயம் ஏற்படுத்தாதென்பதை யாழ்.ஊடக அமையம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்யவும் சட்டத்தின் முன்னிறுத்தவும் யாழ்.ஊடக அமையம் அரசை கேட்டுக்கொள்வதுடன் ஊடக சுதந்திரத்திற்கான பயணத்தில் உறுதியாக அனைத்து ஊடகவியலாளர்களுடனும் கைகோர்த்து பயணிக்குமென்பதையும் தெரிவித்துக்கொள்கின்றது. –என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(தாக்குதல் பற்றிய விவரமான செய்தி 10 ஆம் பக்கத்தில்)**

## கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் மேலும் 7 பேருக்குக் கொரோனாத் தொற்று!

கொழும்பு, ஒக்.13

கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் மேலும் ஏழு பணியாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

அதற்கமைய கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.

## திஹாரிய பகுதி ஆடைத்தொழிற்சாலையின் ஊழியர் ஒருவருக்கும் கொரோனா தொற்று!

திஹாரிய பகுதியில் அமைந்துள்ள ஹெலா ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அந்த நிறுவாகத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் ஏனைய ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆடைத் தொழிற்சாலையின் நிர்வாகம் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேநேரம், மினுவங்கொடை கொத்தணிப் பரவலுடன் கொரோனா தொற்றுக்குள்ளான ஊழியருக்கு ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதுடன், ஊழியர்களின் சோதனை முடிவுகள் வெளியானதும் ஆடைத் தொழிற்சாலையைத் திறப்பது தொடர்பான முடிவுகள் எட்டப்படும் என்றும் நிர்வாகத்தினர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## பண்டத்தரிப்பு உப தபாலக ஊழியர் ஒருவர் கொரோனா அறிகுறிகளுடன் அடையாளம்

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு உப தபாலகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸ் அறிகுறிகளுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

தொண்டை நோ உட்பட்ட கொரோனா அறிகுறிகளுடன் காணப்பட்ட அவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்றுள்ளார்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர்.

சாவகச்சேரியில் வசிக்கும் குறித்த நபர் கடந்த முதலாம் திகதி பண்டத்தரிப்பு உப தபாலகத்துக்கு மாற்றலாகியுள்ளார்.

இதேவேளை, அவருடைய மனைவி முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தில் பணியாற்றுகின்றார் எனவும் தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட நபருக்கு பெரும்பாலும் இன்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

பரிசோதனை முடிவுகளின் பின்னரேயே அவரைச் சார்ந்திருப்பவர்களை தனிமைப்படுத்துவது தொடர்பில் தீர்மானிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## மின்னியலாளர்களுக்கான கருத்தரங்கு கொரோனா அச்சத்தால் நிறுத்தப்பட்டது

கொரோனாவைரஸ்தொற்று பரவல் காரணமாக சுகாதார அமைச்சின் பரிந்துரைகளுக்கமைய மின்னியலாளர்களுக்கு உரிமம் வழங்கல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலுள்ள மின்னியலாளர்களுக்கான குறித்த விழிப்புணர்வு கருத்தரங்குகளே இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளன.

மாத்தறை மாவட்டத்தில் ருகுணு பல்கலைக் கழகத்தின் ரவீந்திரநாத் தாகூர் மண்டபத்திலும், தங்காலை நகரசபை மண்டபத்திலும், களுத்துறை நகரசபை மண்டபத்திலும் இவ் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த துடன் இவை மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன.

குறித்த மாவட்ட மின்னியலாளர்களுக்கான அடுத்த விழிப்புணர்வு பின்னர் அறியத்தரப்படும் எனவும், மேலதிக தகவல்களுக்கு 0770399119 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## நோயாளிகளை அநாவசியமாக பார்வையிடுவதைத் தவிர்க்கவும்

அநாவசியமாக நோயாளிகளை பார்வையிடுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நோயாளிகளைப் பார்வையிடச் செல்வோர், தமது உடல் நிலை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியது கட்டாயம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அத்தியாவசியம் காணப்பட்டால் மாத்திரம் வைத்தியசாலைகளுக்கு செல்லுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## வெடுக்குநாறி ஆலயத்துக்குச் சென்ற அடியார்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

நெடுங்கேணி – வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு பொலிஸார் மற்றும் தொல்பொருட் திணைக்களங்களால் தடை ஏற்படுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது வனவளத்திணைக் களமும் தடை ஏற்படுத்துவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அந்தவகையில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) ஆலயத்துக்குச் சென்ற பொதுமக்களை நெடுங்கேணி பிரிவை சேர்ந்த வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆலயத்திற்கு செல்லவிடாமல் தடுத்துள்ளமையுடன், அவர்களை திருப்பி அனுப்பியுள்ளனர்.

விடுமுறை தினம் என்பதால் அதிகமான பொது மக்கள் ஆலயத்தைத் தரிசிக்கச் சென்ற நிலையில், வனவளத்திணைக்களத்தின் செயற்பாட்டால் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியிருந்தனர்.

இதுவரை ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருட் திணைக்களம் மற்றும் நெடுங்கேணி பொலிஸாரே தடையை ஏற்படுத்திவந்த நிலையில், தற்போது வனவளத்திணைக்களமும் தடை ஏற்படுத்துவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆலயம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு, வவுனியா நீதிமன்றில் இடம்பெற்றுவரும் நிலையில் அதனையும் பொருட்படுத்தாமல் அரச திணைக்களங்களால் இவ்வாறான தடை ஏற்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வெடுக்குநாறி மலை ஆதி இலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு



அங்கு செல்வதற்கும் பொதுமக்கள் மற்றும் ஆலயத்தின் நிர்வாகத்தினருக்கும் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பாக வன்னியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியல்வாதிகளும் அக்கறையற்று இருக்கின்றனர் எனப் பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

கடந்த வாரமளவில் கூட ஆலயத்தில் நீண்டகாலமாக பூசை செய்து வந்த பூசாரியை ஆலய வளாகத்திற்குள் செல்லவேண்டாம் என்றும், சென்றால் கைதுசெய்வோம் என்றும் நெடுங்கேணி பொலிஸார் அச்சுறுத்தியிருந்தனர் எனவும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஆலயத்தை அபகரிப்பதற்காக பல்வேறு நெருக்குதல்களும் தடைகளும் தொல்பொருட்திணைக்களம் மற்றும் நெடுங்கேணி பொலிஸாரால் ஏற்படுத்தப்பட்டு வரும் நிலையில், இந்த விடயங்கள் தொடர்பாக அரசியல்வாதிகள் அக்கறை செலுத்தாமல் நழுவிச்செல்கின்றனர் எனப் பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஒன்றுபட்டு அணுகுவோம்

ஒரு புறம் கொரோனாத் தொற்றின் பேரதிர்ச்சிக்குள் நாடு மூழ்கி அந்தரித்துக் கொண்டிருந்தாலும், மறுபுறத்தில் கொழும்பின் சர்வதேச இராஜதந்திர உறவாடல்களில் சத்தம் சந்தடியற்ற பெரிய நகர்வுகள் காதும் காதும் வைத்தால் போல அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

அதனைக் கவனித்து, அந்த ஓட்டத்துக்கு ஏற்றவாறான காய் நகர்த்தல்களில் தமிழர் தரப்பான நாங்களும் சம்பந்தப்பட்டு மேற்கொள்ளாவிட்டால், விவகாரம் எங்கள் கைகளை நழுவிப் போய் விடும். உலக ஓட்டத்தில் அவதானிக்கப்பட முடியாத தொலைவில் உள்ள குழிக்குள் நாம் விழுத்தப்பட்டு, தனித்துப் போய் விடுவோம்.

கொரோனாத் தொற்று மீள வீரியமடைந்திருக்கும் இந்தச் சமயத்தில், தனிமைப்படுத்தல் விதிகளை எல்லாம் மீறி, மிக உயர்ந்த மட்டத்திலான தலைவர் ஒருவரைக் கொண்ட 26 பேர் சீன அணி, நேரடியாக நாட்டுக்குள் நுழைந்து, ஒரு நாள் மட்டும் தங்கி நின்று, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருடன் மட்டும் பேச்சு நடத்திச் சென்றிருப்பதும் –

இலங்கையை சர்வதேசக் கடன் பொறுப்பு நெருக்கடிகளில் இருந்து விடுவித்து மீட்கும் வகையிலான கடன் உதவு தொகைகளை நீண்ட காலத் தவணை அடிப்படையில் வழங்குவதற்கு இந்த விஜயத்தின் போது சீனா அறிவித்திருப்பதும் –

சீனத் தரப்பின் இந்த அதிரடி வருகையின் ஆழ்ந்த பரிமாணங்களை நமக்கு உணர்த்துவதற்குப் போதுமானவையாகும்.

இலங்கையில் சீனாவின் செயற்பாடுகள், நடவடிக்கைகள், நகர்வுகள் குறித்து இந்தியாவும், மேற்குலகமும் கவலையும் சிரத்தையும் கொண்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரிந்தவை தான்.

இலங்கையில் தனது ஒளிவுமறைவான நடவடிக்கைகளை சீனா நிறுத்த வேண்டும், பகிரங்கமாகச் செயற்பட வேண்டும் என்று கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தமையும் –

அமெரிக்கத் தூதுவரின் அந்தக் கருத்து வெளிப்பாடு இறையாண்மை பெற்ற இரு நாடுகளின் தனிப்பட்ட உறவாடல்களில் மூன்றாம் தரப்பின் அத்துமீறிய தலையீடு என்ற பாணியில் அதனைக் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டமையும் – கவனிக்கத்தக்கவையாகும்.

இதேசமயம், இலங்கை – சீன அதீத நெருக்கமும், இலங்கை விடயத்தில் சீனாவின் பங்களிப்பும், நமது அயல் தேசமான இந்தியாவை மிகவும் எரிச்சலுக்குள்ளும், விசனத்துக்குள்ளும் மூழ்கடித்திருக்கின்றன என்பதும் தெரிந்ததுதான்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், இலங்கை என்ற குட்டித் தீவை மையமாக வைத்துக் கொண்டு சீனா ஒரு புறமும், மேற்குலக நாடுகள் மற்றும் அமெரிக்கா, இந்தியா போன்றவை மறுபுறமுமாக நின்றபடி நடத்தும் இராஜதந்திர சமர்க்களத்தில் தமிழர்களாகிய நாம் தூரத்தில் வெறும் பார்வையாளர்கள் அந்தஸ்துடன் நின்றுவிட முடியாது.

இந்த சர்வதேச தரப்புகள் நடத்தும் அரசியல் சதுரங்க விளையாட்டின் ஏதோ ஒரு புள்ளியில் நமது தமிழர்களது நலன்களுக்கான அசைவியக்கத்துக்கும் பொருத்தமான இடமுண்டு.

அதை நாமே தேடிப் பிடித்து, சமய சந்தர்ப்பம் பார்த்து அதற்குள் நுழைந்து, எமது இலக்கை நோக்கிய காய் நகர்த்தலைத் தவறாது முன்னெடுக்க வேண்டும்.

சிரித்துத் தோளில் கைபோட்டு, நட்போடு உறவாடியபடி முன்னெடுக்கப்பட வேண்டிய இராஜதந்திரப் போர் இது.

இந்தியா, அமெரிக்கா, மேற்குலக நாடுகள் போன்றவற்றைக் கையாள்வதற்குத் தமிழர் தரப்பு ஐக்கியப்பட்டிருப்பது முக்கியம்.

குறிப்பாகத் தமிழ்த் தேசிய சக்திகள் ஒன்றுபட்டிருப்பது இது விடயத்தில் தமிழர் தரப்பின் பேரம்பேசும் ஆற்றலை வலுப்படுத்தும். ஆனாலும் அதிலும் ஒரு சிக்கல் உண்டு.

இது இராஜதந்திர விவகாரம். எடுத்தேன், கவிழ்த்தேன் என்று இலகுவாக விடயங்களைக் கையாண்டு விட முடியாது.

கூட்டமாகச் சந்தித்து விவரங்களைக் கலந்துரையாடவோ, விடயங்களைக் கொண்டு சொல்லவோ பெரும்பாலும் இராஜதந்திரிகள் விரும்ப மாட்டார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட தரப்பினருடன் மனம் விட்டு பேசி, உறவாடவும், உரையாடவும் பெரும்பாலும் அவர்கள் விரும்பார்கள்.

தனித்துப் பேசுவதுதான் அவர்களுக்கும் பாதுகாப்பானது. தமிழர் தரப்புக்கும் கூடப் பாதுகாப்பானதுதான்.

ஆக, இப்போது தென்னிலங்கையில் கட்டவிழும் சர்வதேச இராஜதந்திர நெருக்கடிகளுக்கு மத்தியில் தன்னுடைய தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் தேடலை தமிழ்த் தேசியத் தரப்புகள் ஒன்றுபட்டு முன்னெடுக்க வேண்டியது அவசியம்.

அதையும் கூடத் தமது ஒரிரு பிரதிநிதிகள் மூலம் நம்பிக்கையுடன் முன்னெடுக்க அவர்கள் முயற்சி செய்ய வேண்டும்...!

அதற்கு முதலில் அவர்கள் தங்களுக்குள், பேசி உடன்பாடு கண்டு, இணக்கத்துக்கு வர வேண்டும். செய்வார்களா...?

# சமூக தொற்றாக கொரோனா இலங்கையில் மாறவில்லை!

### தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.13

இலங்கையில் தற்போது காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றானது சமூகத்திற்குள் பரவவில்லை என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள தொற்றாளர்கள் அனைவரும் மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் மாத்திரமே என அந்தப் பிரிவின் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் தனியார் வைத்தியசாலைகளில் எந்த வொரு நடைமுறைக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளை செய்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லையெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ட்ரோன் ஊடாக அச்சுறுத்தல்!

### விடுத்த நபர் கைது

ட்ரோன் கமெராவின் ஊடாக தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை – திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ட்ரோன் கமெராவை பயன்படுத்தி சந்தேகநபர், புகைப்படங்களை எடுக்கிறார் எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தத் தகவலுக்கமைய விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கும், அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர்.சேனாதீரவின் அறிவுறுத்தலுக்கும் அமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை படையணியின் தலைமையதிகாரி பொலிஸ் பரிசோதகர் தென்னகோன் தலைமையிலான விசேட அதிரடிப்படை குழுவினர் தேடுதலை மேற்கொண்டனர்.

இதன்போது, அந்த ட்ரோன் கமராவை மீட்டதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் 33 வயதுடைய நபரையும் கைது செய்து திருக்கோவில் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

ட்ரோன் கமெரா இயங்கு நிலையில் காணப்பட்டதுடன் அதன் கட்டுப்பாட்டு



தொகுதி இன்னும் மீட்கப்படவில்லை.

நாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்ற நிலையில் ட்ரோன் கமெரா தொடர்பில் கடுமையான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

உயர்பாதுகாப்பு வலயங்களில்இந்த கமெரா இயக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் அனைத்து ட்ரோன் கமெராக்களையும் இலங்கையில் பயன்படுத்துவதற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கை மீறிய குற்றம் 120 பேர் கைதாகினார்கள்!

கம்பஹா மாவட்டத்தின் சில பகுதிகளில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் 120 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

அத்துடன் ஊரடங்கு உத்தரவை மீறி பயணித்த 37 வாகனங்களும் பொலிஸ்துறையினிின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன என அந்த அலுவலகம் மேலும் அறிவித்துள்ளது.

மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் அண்மையில் பெண் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளானமை அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து, மேலும் பலர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை முதல் கம்பஹா மாவட்டத்தில் 18 பொலிஸ் பிரிவுகளுக்கு தனிமைப் படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டது.

அதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் திவுலப்பிட்டிய, மினுவாங்கொட, ஜா – எல, கந்தான மற்றும் கம்பஹா பொலிஸ் பிரிவு, கிரிந்திவெல, தொம்பே, பூகொட, கனேமுல்ல, வீரகுல, வெலிவேரிய, மல்வத்துஹிரிபிட்டிய, நிட்டம்புவ, மீரிகம, பல்லேவெல, யக்கல, சீதுவ மற்றும் கந்தான ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

குறித்த பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடரும் என பொலிஸார் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பணத்தாள், தொலைபேசி திரைகளில் 28 நாள் கொரானா வைரஸ் இருக்கும்!

### மக்களே அவதானம்

கொரோனா வைரஸ் தொற்று பணத்தாள்களிலும் தொலைபேசிகளின் திரைகளிலும் 28 நாள்கள் வரை இருக்குமென ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் எதிர்பார்த்ததை விடவும் அதிக காலம் வாழ்வதாக ஆஸ்திரேலியாவின் தேசிய விஞ்ஞான நிறுவகம் முன்னெடுத்த ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. எனினும் இந்த பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ள தொலைபேசியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இருமல் மற்றும் பேசுகின்ற போதும் வைரஸ் வெகுவாக பரவுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உலோகம் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களின் ஊடாக வைரஸ் பரவக் கூடுமெனவும் கண்டறியப்பட்டுள்ளது.

## வெளிநாட்டில் உள்ளோர் இலங்கை வரத் தடை!

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் (ஓய்வு பெற்ற) பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் தனிமைப்படுத்தப்பட்ட மையங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமையால் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தருபவர்கள் அனைவரும் கட்டாயமாக 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசின் செயற்பாடுகளுக்கு மக்கள் ஒத்துழைக்கவேண்டும்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு பொது மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என இராணுவத் தளபதி சவேந்திரசில்வா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே சவேந்திர சில்வா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது –

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய பலர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஊடாக, இரண்டாவது நபர்கள் சிலருக்கும் கொரோனாத் தொற்றுப் பரவியுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட அனைவரும் தற்போது சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு, பி.சி.ஆர்.பரிசோதனைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளுமாறும் மக்கள் கோரி வருகிறார்கள். ஆனால், முதல் கொரோனா தொற்றாளர் ஒருவருடன் தொடர்பு கொண்டு 6 நாள்களுக்குப் பின்னரே இரண்டாவது தொற்றாளருக்கு பி.சி.ஆர். ஊடாக தொற்றை உறுதிப்படுத்த முடியும்.

எனவே, மக்கள் இந்தச் செயற்பாட்டைப் புரிந்துக் கொள்ள வேண்டும். மேலும் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களையும் நாம் தனிமைப்படுத்தியுள்ளோம். அந்தப் பிரதேசங்களையும் முடக்கியுள்ளோம்.

பி.சி.ஆர்.பரிசோதனைக்கு எவரேனும் உட்படுத்தப்படுவாரானால், அதன் முடிவுகள் வரும்வரை அவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படல் அவசியமாகும். தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதைப் பொறுத்துதான் ஊரடங்கு தொடர்பில் தீர்மானிக்க முடியும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கேரள கஞ்சாவை வைத்திருந்த ஒருவர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி – பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆழியவளை பகுதியில், கேரளா கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி – ஆழியவளை பகுதியில் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக புலனாய்வுப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தத் தகவலுக்கமைய பளை நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் குலரத்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர், கடந்த சனிக்கிழமை மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, 10.765கிலோ கிராம் கேரள கஞ்சாவும், 14 ஆயிரத்து 500 ரூபா பணமும் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்துள்ளமையுடன், அவரை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.



## வடக்கு மாகாண சாரதிகள் கவனவீர்ப்புப் போராட்டம்




வடக்கு மாகாண சாரதிகள், கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நேற்று (திங்கட்கிழமை) யாழில் முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சாரதிகள் விடயத்தில் அரசியல் தலையீடுகள் புகுத்தப்படுகின்றன எனக் குற்றஞ்சாட்டியுள்ள அவர்கள், தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக நேற்று சுகவீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது ஆளுநரின் செயலாளரிடம் மகஜர் ஒன்றையும், கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்த சாரதிகள் கையளித்துள்ளனர்.

## இந்திய இராணுவம் படுகொலை செய்தவர்களின் நினைவு தினம்





யாழ்ப்பாணம் – கொக்குவிலில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு தினம், பிரம்படி பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

இந்திய இராணுவத்தினரால் கொக்குவில் பிரம்படி பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 34 ஆம் ஆண்டு நினைவஞ்சலி, நேற்றுக் காலை நினைவு தூபியில் நினைவு கூரப்பட்டது.

நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்து, ஈகை சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் உப தவிசாளர் ஜெயகரன், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## சுகாதார நடைமுறைகளை மக்கள் பின்பற்றவேண்டும்!

### மன்னார் பிரதேச செயலர் அறிவுறுத்து

கொரோனா வைரஸ் தொற்று பரவல் எமது பிரதேசங்களிலும் பரவிக்கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளமையால் மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் கவனம் செலுத்த வேண்டுமென பிரதேச செயலாளர் எஸ்.பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் நாட்டில் அதிகரித்துள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக எஸ்.பிரதீபன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து எம்மையும் ஏனையோரையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாயின் சுகாதார நடைமுறைகளை மக்கள் பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மேலும், அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் வீட்டிலிருந்து வெளியே செல்வதுடன் அனைவரும் முகக்கவசம் அணிவது கட்டாயமானதாகும்.

கைகளை சவர்க்காரமிட்டு கழுவுவதுடன் தொற்று நீக்கி மூலம் சுத்தப்படுத்தவும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் இருவருக்கிடையே குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளியை பேணவும், தற்போதைய சூழ்நிலையில் மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்ப்பது சிறந்ததாகும்.

மேற்குறிப்பிட்ட சுகாதார நடைமுறைகளைக் கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்துடன் வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தந்தோர் குறிப்பாக கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலிருந்து மன்னாருக்கு வருகை தந்தோர் சுகாதாரப் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். மாநகர சபைக்கு எதிராக நேற்று பழக்கடை வியாபாரிகள் போராட்டம்






(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நகர பழக்கடை வியாபாரிகள் யாழி லுள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத் தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்றுக் காலை முன்னெடுத்தனர்.

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் அமைந் துள்ள பழக்கடைகளை அகற்றுமாறு யாழ். மாநகர சபை அறிவித்துக் காலக்கெடு விடுத் துள்ளது.

இந்தநிலையில், அதற்கு எதிர்ப்பு தெரி வித்து வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த யாழ். நகர பழக்கடை வியாபாரிகள் ஆளுநரிடம் மகஜரொன்றை யும் கையளித்துள்ளனர்.

# கோப்பாய் கல்வியியற்கல்லூரியும் தனிமைப்படுத்தல் மையமாகியது!






யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்று வந்த 375 ஆசிரிய மாணவர்கள் அவர்களது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் இராசபாதையில் அமைந்துள்ள தேசியக் கல்வியியற் கல்லூரி மாணவர் விடுதி தனிமைப்படுத்தல் முகாமாக மாற்றப்படவுள்ளமை காரணமாக மாணவர்களை அவர்களது வீடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையை நேற்று (திங்கட்கிழமை) நிர்வாகம் மேற் கொண்டுள்ளது.

இதற்கமைய, அந்தந்த மாவட்டங்க ளுக்கு உரியவர்கள் தனித்தனியான பஸ்களில் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையை கல் லூரி நிர்வாகம் இராணுவத்துடன் இணைந்து முன்னெடுத்துள்ளது.

நேற்று காலை சுமார் எட்டு பஸ்களில் 71 ஆண் ஆசிரிய மாணவர்களும் 304 பெண் ஆசிரிய மாணவர்களும் அவர் களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு கல்லூரியானது தனிமைப்படுத் தல் முகாமாக மாற்றுவதற்கு இராணுவத்தின ரால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், அவரது கட்சியைச் சேர்ந்த மற்றொரு எம்.பியான விநோநோகராத லிங்கம் ஆகியோர் நேற்றுக் காலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவரது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்துப் பேசினர் அப்போது எடுக்கப்பட்ட படம்.**

# இலங்கைக்கு ரூ. 16.5 பில்லியன் நிதி உதவி வழங்குகின்றது சீனா

இலங்கைக்கு 16.5 பில்லியன் ரூபா (ஆயிரத்து 650 கோடி ரூபா) பெறுமதியான நிதி உதவி வழங்கப்படவுள்ளது எனச் சீனா அறிவித்துள் ளது.

இலங்கைக்கான சீனத் தூதர கத்தினால் நேற்று வெளி யிடப்பட் டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த நிதி உதவிக்கான இரு தரப்பு ஒப்பந்தம் கடந்த 9ஆம் திகதி கைச்சாதிடப்பட்டுள்ளது எனக் குறிப் பிடப்பட்டுள்ளது.

சீன சர்வதேச அபிவிருத்தி நிறு வனத்தின் தலைவர் மற்றும் திறை சேரியின் செயலாளர் ஆகியோ ருக்கு இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளளது.

# உத்தரவை மீறி வவுனியாவில் இயங்கும் கல்வி நிலையங்கள்

கொழும்பு, ஒக்.12

கொரோனா வைரஸ் தாக்கம் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில் தனியார் கல்வி நிலை யங்களையும் மூடுமாறு அரசு அறிவித்துள்ளது. ஆயினும், இந்த அறிவித்தலை மீறி வவுனி யாவில் பரவலாக தனியார் கல்வி நிலையங்கள் இயங்குகின்றன என்று பலரும் விசனம் தெரிவித் துள்ளனர்.

கொரோனாத் தாக்கத்தை யடுத்து பாடசா லைகளுக்கு விடு முறை வழங்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியற் கல்லூரிகள் என்பன வும் மூடப்பட்டுள்ளன. அரசின் முக்கிய திணைக்களங்களின் செயற்பாடுகளும் நிறுத்தப்பட் டுள்ளன. இந்நிலையில், பல மாகாணங்களில் தனியார் கல்வி நிலையங்களையும் தற்காலிக மாக மூடுமாறு உத்தரவு பிறப்பிக் கப்பட்டிருந்தது. அந்தவகையில் வவுனியா மாவட்ட அரச அதிபர் உள்ளூராட்சி திணைக்களம் ஊடாக தனியார் கல்வி நிலையங் களை மூடுமாறு தெரிவித்திருந் தார். ஆனாலும், வவுனியாவின் பண் டாரிக்குளம், சூமாங்குளம், வைரவபுளியங் குளம், தோணிக் கல் போன்ற பகுதிகளில் சில தனி யார் கல்வி நிலையங்கள் இயங்குகின்றன என்று தெரிவிக் கப்படுகின்றது.

இதன் காரணமாக சில மாண வர்கள் தனியார் கல்வி நிலையங் களுக்குச் செல்வதால் அங்கு பாடத்திட்டம் முன்னோக்கி நக ரும் என்பதால் அங்கு கற்ற அனைத்து மாணவர்களுகம் கொரோனா அச்சத்துடன் தனி யார் கல்வி நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது எனவும் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

# வீடுகளுக்கு மருந்துவகை வழங்கும் திட்டம் ஆரம்பம்

அரச வைத்தியசாலை களில் கிளினிக் சிகிச்சை களை மேற்கொள்ளும் நோயாளர்களுக்கான மருந்து வகைகளை அவர் களது வீடுகளுக்கே வழங் கும் வேலைத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மா னித்துள்ளது.

அதற்கமைய கிளினிக் மருந்துகளை இன்று (செவ் வாய்க்கிழமை) முதல் வீடுக ளுக்கு விநியோகிப்பதற் கான வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவ டிக்கை மேற்கொள்ள சுகா தார அமைச்சு தீர்மானித் துள்ளதாக அரசாங்க தக வல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

நாட்டில் தற்பொழுது நில வும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமையைக் கவனத்திற் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் மேலும் தெரி வித்துள்ளது.

கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங் களில் முதல் கட்டமாக இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக் கப்படுவதுடன், பின்னர் இதனை விரிவுபடுத்துவ தற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கீழ்வரும் தொடர்பிலக்கங்களை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குருணாகல் – 0701902778
மினுவங்கொடை – 0700 -1092770
நீர்கொழும்பு – 0701902771
ராகம – 0701902772
கம்பஹா – 0701902773

# மக்கள் கொரோனா அச்சம் உணவுப்பொருள் தட்டுப்பாடு!

மக்கள் திடீரென உணவுப் பொருள்களை வாங்க குவிந்து வருகின்றமையால் சந்தையில் உணவுப் பொருள்களுக்கு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுகள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஜி.எஸ். நாதன் இத னைத் தெரிவித்துள்ளார்.

ஒரு வாரத்தில் விற்கப்பட வேண் டிய உணவுப் பொருள்கள் கடந்த வாரம் ஒரு நாளில் விற்கப்பட்டதா கவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வாரத்திற்குள் நிலைமை இயல்பு நிலைக்குத் திரும்பும் என வும், அரிசி தவிர அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு பற்றாக் குறை இருக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே மக்கள் இதுதொடர் பாக அச்சப்படத் தேவையில்லை என வும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

# மன்னாரில் 922 இற்கு மேற்பட்டோர் தனிமைப்படுத்தலில் உள்ளார்கள்!

## பதில் அரச அதிபர் தகவல்

மன்னார், ஒக்.13

மாவட்டத்தில் கொரோனா பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக மாவட்டத்தில் இதுவரை 922 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அந்த மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.

மன்னார் - பட்டித்தோட்டத்தை சேர்ந்த 130 குடும்பங்களை சேர்ந்த 443 பேரும் பெரியகடை பகுதியை சேர்ந்த 166 குடும்பங்களை சேர்ந்த 479 பேரும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நபருடன் நேரடியாக தொடர்புபட்டவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களைத் தவிர்ந்த அந்தக் கிராமங்களைச் சேர்ந்த ஏனையவர்களை விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, நாங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனையின் மூன்றாவது நிலை முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த முடிவுகளின் படி மேலும் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நாங்கள் 24 மணி நேர முடக்க நிலையை இரண்டு கிராமங்களுக்கு ஏற்படுத்தியிருந்தோம்.

நேற்று முழுமையாக அப்பிரதேசங்கள், இராணுவம் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்பில் கண்காணிக்கப்பட்டு வந்தன. பரிசோதனைகள் சுமுகமான முறையில் நிறைவடையுமாக இருந்தால் மீண்டும் மக்களின் இயல்பான நிலைக்கு அக்கிராமங்களை வழங்க முடியும்.

அதேநேரத்தில் இதுவரை எமது பகுதியில் சமூக தொற்று இனங்காணப்படாது இருந்தால் கூட மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

விழிப்புணர்வு இல்லாத நிலையில் நாங்கள் இந்த அபாய நிலையை மேலும் எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

மேலும் அரச அலுவலகங்கள் அனைத்தும் இயல்பான நிலையில் தங்கள் பணிகளை மேற்கொள்ளும். எனவே பொய்யான தகவல்களை நம்பி அலுவலகத்துக்கு சமுகம் அளிப்பதைத் தவிர்க்க வேண்டாம். உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அனைத்து அரச ஊழியர்களும் அலுவலகங்களுக்கு சமுகமளிக்க வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆண் ஒருவரின் சடலம் ஹற்றன் வீட்டில் மீட்பு!



ஹற்றன் - ஹிஜ்ஜிராபுர பகுதியிலுள்ள வீடொன்றில், இறந்து கிடந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று (திங்கட்கிழமை) கண்டெடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு உரிமையாளர் வழங்கிய தகவலை அடுத்தே இந்தச் சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்டவர் பழனியாண்டி (வயது 60) என்றும் இவர் ஓர் ஓட்டோச் சாரதி என்றும் இவர் மூன்று நாள்களுக்கு முன் இறந்து இருக்கலாம் என்றும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

இந்த நபர், தனது வீட்டுக்கு அருகிலுள்ள வீதியில் கடந்த 2 நாள்களுக்கு முன் ஓட்டோவை நிறுத்தி விட்டுச் சென்ற நிலையில், மீண்டும் திரும்பி வந்து தனது ஓட்டோவை எடுக்காதமையால் சந்தேகம் கொண்ட வீட்டு உரிமையாளர் அவரின் குடும்பத்தினருக்கு அறிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து அவரின் உறவினர்கள் இவர் பற்றி தகவல் எதுவையும் தெரியாது என தெரிவித்தமையை அடுத்து, உரிமையாளர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

ஆதனைத் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அவர் நிர்வாணமாக வீட்டினுள் இறந்து கிடந்தார் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவர், இந்த வீட்டில் தனது 2 ஆவது மனைவியுடன் வாழ்ந்து வந்தார் எனவும் 2 நாள்களுக்கு முன் அவரின் மனைவி வீட்டை விட்டு சென்றார் எனவும் அதன் பின் அந்த நபரையும் காணவில்லை என்றும் மின்சார பட்டியல் ஊழியர் மற்றும் தபால் ஊழியர் ஆகியோர் வந்து, கதவு தட்டிய போதும் திறக்கப்படவில்லை என்றும் அயலவர்கள் தெரிவித்தனர்.

இந்த நபர் நோய் காரணமாக இறந்தாரா அல்லது வேறு ஏதும் காரணங்களால் இறந்தாரா என்பது தொடர்பாக பல்வேறு கோணங்களில் ஹற்றன் கைரேகை அடையாளப் பிரிவு மற்றும் ஹற்றன் பொலிஸார் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் நரேந்திரன் ஜெயந்திநாத் கருத்து தெரிவிக்கையில் -

இந்த நபர் எனது வீட்டில் தான் வாடகைக்கு இருக்கிறார். கடந்த 2 நாள்களுக்கு முன் வீதியில் நிறுத்தப்பட்டிருந்ஓட்டோ எடுக்கப்படவில்லை, நாய்கள் அதில் படுத்து உறங்கியமையால் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவரின் மகனுக்கு இந்தத் தகவலை வழங்கினேன். அதனை தொடந்து இன்று (நேற்று) காலை என்னிடம் அவரது மகன் தொடர்பு கொண்டு அவர் தொடர்பாக எந்த தகவலும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார். பின்னர் நான் பொலிஸாருக்கு அறிவித்தேன்' - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் விபத்து ஐந்து பேர் படுகாயம்!



வவுனியா ஏ – 9 வீதி, சாந்தசோலை சந்திப் பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) மாலை இடம்பெற்ற விபத்தில், இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது –

வவுனியா நகர்ப்பகுதியில் இருந்து ஏ – 9 வீதியூடாக சாந்தசோலை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள், சாந்தசோலை சந்தியால் திரும்ப முற்பட்டபோது அதே திசையில் வேகமாக பின்னால் வந்துகொண்டிருந்த மிதிவெடி நிறுவனத்திற்கு சொந்தமான கெப்ரக வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது கெப்ரக வாகனம், அருகில் இருந்த பள்ளத்திற்குள் விழுந்த நிலையில், பாரிய அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் மற்றும் கெப்ரக வாகனத்தில் பயணம் செய்த நான்கு பேர் உட்பட 5 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஊழியருக்குக் கொரோனா!

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள இலங்கை சரக்கு செயற்பாட்டுப் பிரிவில் உள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்தின் ஊழியருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஊழியருக்கு, நேற்று (திங்கட்கிழமை) காலை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அங்கு பணியாற்றிவரும் 50 ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# ஏன்.டி.பி. வங்கி ஊழியருக்கும் கொரோனாத் தொற்று உறுதி!

ஏன்.டி.பி. வங்கியின் மரைன்ட்ரைவ் பகுதிக் கிளை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வங்கிக் கிளைக்கு, மினுவாங்கொட பகுதியிலிருந்து வரும் பணியாளருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டமையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வங்கிக் கிளை நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வங்கியின் செயற்பாடுகள் தற்காலிகமாக இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் வங்கிக் கிளை வளாகத்தில் கிருமித் தொற்று நீக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனியார் மின்சார நிறுவனத்தின் ஊழியர் 12 பேருக்கு கொரோனா!

கந்தானை இலங்கை மின்சார நிறுவனத்தில் (தனியார்) கடமையாற்றி வரும் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளனர் என ஜா - எல பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் மகள் மினுவங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி வரும் நிலையில், அவர் தற்போது தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கந்தானை இலங்கை மின்சார (தனியார்) நிறுவன பணியாளர்கள் 13 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில், 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஜா - எல பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயால் ஒருவர் பலி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயால் மேலும் ஒரு மரணமாகியுள்ளார் என வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடத்தில் டெங்கு நோய்த் தாக்கத்தால் இந்த மாவட்டத்தில் இடம்பெற்ற மூன்றாவது மரணமாக இது பதிவாகியுள்ளது.

கடந்த செபரெம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரையும் 16 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த வாரம் டெங்கு தாக்கத்தால் பாதிப்புக்குள்ளான ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 9 நோயாளர்களும், வாழைச்சேனை, மட்டக்களப்பு மற்றும் ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 2 டெங்கு நோயாளர்களும், கோரளைப்பற்றுமத்திய,வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒரு நோயாளருமாக மொத்தம் 16 பேர் மாவட்டத்தில் இனங் காணப்பட்டுள்ளனர்.

இருப்பினும் வாகரை, செங்கலடி, ஏறாவூர், வவுணதீவு, காத்தான்குடி, பட்டிப்பளை, வெல்லாவெளி,களுவாஞ்சிக்குடி மற்றும் கிரான் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரப் பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை. மேலும் கடந்த 9 மாதங்களில் இந்த மாவட்டத்தில் 2 ஆயிரத்தி 248 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்களின் ஊழியர்களுக்குக் கொரோனா சோதனை!

கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் அரச மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் இரண்டின் ஊழியர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

அதற்கமைய அரச தொலைக்காட்சியொன்றின் 40 பணியாளர்கள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

மினுவங்கொடையில் ஒக்ரோபர் முதலாம் திகதி சிறுவர் தின நிகழ்ச்சியொன்றை அரச தொலைக்காட்சி ஏற்பாடு செய்திருந்தது.

ஆந்த நிகழ்வில் கலந்துகொண்ட நபர் ஒருவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது பரிசோதனைகளில் தெரியவந்தது.

இந்த நிகழ்வில் தொலைக்காட்சி பணியாளர்கள் பலர் கலந்துகொண்டனர். இதனைத் தொடர்ந்தே அவர்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்றும் தனது ஊழியர்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir



– வி.ரி.சகாதேவராஜா –

# கொரோனாவுக்கேற்ப வாழக்கற்றல்!

கொரோனாவுக்கேற்ப வாழக்கற்றல் என்ற தலைப்பு சற்று மயக்கத்தை தரக்கூடும்.கொரோனவோடுவாழுதல், கொரோனாவுக்கேற்ப வாழுதல் எனும் இரு எண்ணக்கருக்கள் உள்ளன. இவற்றில் இரண்டாவது எண்ணகருவைத்தான் கல்விப் புலத்தினர் விதந்துரைப்பர்.

கல்விப்புலத்தில் பொதுவாக நான்கு தூண்கள் (4pillers) பற்றி அடிக்கடி பேசப்படுவதுண்டு. அந்தத்தூண்களிலொன்றாக ஒன்றாகவாழக்கற்றல் (learning together) என்ற ஒரு எண்ணக்கரு உண்டு. அந்தக்கற்றல் தற்போதைய சமகால பிரபஞ்சத்தில் அவசியம் தேவைப்படும் ஒன்றாகத் திகழ்கிறது.

ஆம், உலகின் சகலபாகங்களிலும் வியாபித்திருக்கின்ற கொரோனா வைரஸ் தீநுண்மி இன்று எம்மைவிட்டு விலகுவதாக இல்லை. அது நிரந்தரமாக எம்முடன் தொடர்ச்சியாக பயணிக்கப்போகின்றது. எனவே அதற்கேற்ப நாம் வாழப் பழகிக் கொள்ளவேண்டும், அதாவது வாழ்க்கைமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று ஆரம்பத்தில் ஒரு விஞ்ஞானி கூறினார். அதனைச் சிலர் விமர்சனம் செய்தனர்.

எனினும் அதுதான் இன்று நிஜமாக. வருகிறதோ என எண்ணத் தோன்றுகிறது. எனவே கல்வியியலாளர்கள் அன்று வகுத்த நான்கு தூண்களில் ஒன்றை இன்று முக்கியமாக கடைப்பிடிக்கவேண்டியுள்ளது.

தெரிந்தோ தெரியாலோ தடிமன்,காய்ச்சல் போன்று கொரோனாவும் எம்முடன் தொடர்ந்து பயணிக்கப் போகின்றது என்ற செய்தியை அத்தீநுண்மி சொல்லாமல் சொல்கிறது.

சூறாவளி, சுனாமி, பெருவெள்ளம் போன்றவற்றுக்கு எவ்வாறு இந்தோனேசியா, யப்பான் போன்ற நாடுகள் தமது வாழ்க்கைக் கோலத்தை மாற்றிக்கொண்டு பயணிக்கின்றனவோ அவ்வாறு நாமும் கொரோனாவுக்கேற்ப வாழ்க்கைமுறையை மாற்றிக்கொண்டு பயணிக்கவேண்டியதன் அவசியத்தை சூழல் எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறது.

கொரோனா என்றால், முழுநாட்டையும் மூடுவது,




பரீட்சைகளை நிறுத்துவது, கற்றலை போக்குவரத்தை முற்றாக நிறுத்துவது என்பவற்றை விட அதற்கு மாற்று உபாயங்களைக் கையாண்டு வாழமுற்படவேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. அதற்காகப் புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள் சிந்திக்கவேண்டிய காலகட்டம் வந்துள்ளது.

தொற்றுள்ள பிரதேசத்தை மட்டும் முடக்குவது, இலத்திரனியல் உபகரணக் கண்காணிப்பின் துணையுடன் சுகாதார விதிமுறைகளுக்கமைவாக பரீட்சைகளை நடாத்துதல், சமூக இடைவெளியைப் பேணி கூட்டங்களை நடத்துதல், உரிய பாதுகாப்பு நடைமுறைகளுடன் போக்குவரத்தை நடத்துதல் போன்ற உபாயங்களைக் கையாளுவது போல் புதிய யுக்திகளை வகுத்து அதன்படி ஒழுகுதல் வேண்டும். நிலவுக்கு அஞ்சி பரதேசம் போவதா என்பதையிட்டு சிந்திக்க வேண்டும்.

இல்லாவிட்டால் உலக அரங்கிலிருந்து அல்லது வாழ்க்கையிலிருந்து ஓரங்கட்டப்படுவோம். எனவே அதற்கேற்ப சகலதுறையினரும் இணைந்து புதிய புதிய உபாயங்களை வகுத்து வாழவேண்டும்.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட அமெரிக்கா, பிரேசில், இந்தியா போன்ற நாடுகளில் என்ன நடக்கவில்லை? புதிய புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு அவை பயணிக்கின்றனதானே.

எனவேநாமும்இன்றையஅவசரஇயந்திரவாழ்க்கை முறையியலை விடுத்து அந்தக்கால – ஆனால் புதிய – வாழ்க்கைக் கோலத்திற்கு மாறவேண் டும் என்ற செய்தியை கண்ணுக்குத் தெரியாத தீநுண்மி வந்து சொல்கிறது. அதாவது இயற்கையோடு வாழுங்கள் என்று கூறுகிறது.

கல்வி உளவியலில் அறிஞர் பியாஜேயின் வகிபாகம் ஈண்டுகவனிக்கத்தக்கது. பிள்ளை சூழலுக்கு எவ்வாறு பொருத்தப்பாடு காணவேண்டும் என்பதை இரு எண்ணக்கருக்கள் மூலம் விளக்குகிறார்.

சமகால கொரோனா சூழலுக்கு இதுபொருந்துமென கருதி இங்கு பதிவிடுகிறேன்.

அந்த எண்ணக்கருக்களாவன –

1.தன்னமைவாக்கம் (accommodation)
2.தன்மயமாக்கல்(assimilation)

இவையிரண்டும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை.

ஒன்று சூழலை தம்வயப்படுத்துதல். மற்றது சூழலுக்கேற்ப மாறுதல் என்பதாகும். இவையிரண்டும் ஒரு குழந்தை சூழலுக்கு பொருத்தப்பாடு காணும் மார்க்கங்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

தன்மயமாக்கல் என்பது குழந்தைகள் தாம் ஆக்கிய திரளமைப்ப மூலம் சூழலை விளங்கிக்கொள்ள முற்படுதலைக் குறிக்கும். சிலவேளை தமது திரளமைப்பிற்கு பொருந்தாத அனுபவங்களை சூழலில் எதிர்கொள்ளக் கூடும். அப்போது அக்குழந்தை தமது திரளமைப்பை திருத்திக்கொள்வதன்மூலம் அல்லது புதிய அனுபவங்களை இணைத்துக் கொள்வதன்மூலம் அச்சூழலுக்குப் பொருத்தப்பாடடையும். இதனை தன்னமைவாக்கல் என்பர்.

எனவே இன்றைய கொரோனா சூழலில் புதிய புதிய அனுபவங்களை நாம் எதிர்கொள்ள வேண்டி நேரிடுகிறது. அதற்கேற்ப நாம் வாழப் பழகிக் கொள்ளுதலை தன்னமைவாக்கல் எண்ணக்கருமூலம் பெற்றுக் கொள்ளலாம்.


அதனையே தற்போது இலங்கையர் மட்டுமல்ல, உலக மக்களே செய்யவேண்டும். உலக நாடுகள் கொரோனாவுக்கேற்ப மாறி வருகின்றன. நாட்டையும் சமூகத்தையும் நடைமுறைகளில் மாற்றி வருகின்றனர்.

கல்விக்குரிய பத்தி என்பதால் இங்கு அந்த நான்கு தூண்கள் பற்றி சற்றுச் சுருக்கமாகப பார்ப்போம்.

வாழ்நாள் முழுவதும் கல்வி என்பது நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்டது:

1.தெரிந்துகொள்ளக் கற்றல்(learning to know)
2.செய்யக் கற்றுக்கொள்ளல்.(learning to do)
3.ஒன்றாக வாழக் கற்றுக்கொள்ளல்.(learning together)
4.இருக்கக் கற்றுக்கொள்ளல்.(learning to be)

1.போதுமான பரந்த வகைகளை இணைப்பதன்




மூலம் அறிய கற்றுக்கொள்வது. குறைந்த எண்ணிக்கையிலான பாடங்களில் ஆழமாக வேலை செய்வதற்கான வாய்ப்பைக் கொண்ட அறிவு. இது வாழ்நாள் முழுவதும் கல்வி வழங்கும் வாய்ப்புகளிலிருந்து பயனடையக் கற்றுக் கொள்வதை – கற்றுக்கொள்வதையும் – குறிக்கிறது.

2.ஒரு தொழில் திறனை மட்டுமல்லாமல் இன்னும் பரந்த அளவில், பல சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கும் அணிகளில் பணியாற்றுவதற்கும் உள்ள திற




னைப் பெறுவதற்காக செய்ய கற்றுக்கொள்வது. உள்ளூர் அல்லது தேசிய சூழலின் விளைவாக அல்லது முறை சாரா படிப்புகள் மாற்று ஆய்வு மற்றும் வேலைகளை உள்ளடக்கிய முறைசாரா இளைஞர்களின் பல்வேறு சமூக மற்றும் பணி அனுபவங்களின் சூழலில் செய்யக் கற்றுக்கொள்வது என்பதும் இதன் பொருள்.

3. ஒன்றாக வாழ, மற்ற மக்கள் பற்றிய புரிதலைக் கற்றல்.

4.ஒருவரின் ஆளுமையை வளர்த்துக் கொள்வதுடன் இன்னும் அதிக சுயமான தீர்ப்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்புடன் செயல்பட முடியும். அந்த வகையில் கல்வி என்பது ஒரு நபரின் திறனின் எந்த அம்சத்தையும் புறக்கணிக்கக்கூடாது.

யுனெஸ்கோவின் கல்வியின் ஐந்து தூண்கள்:-

21ஆம் நூற்றாண்டிற்கு உண்மையான, பொருத்தமான, ஒருங்கிணைந்த மற்றும் மிகவும் பொருத்தமான கற்றல் வாய்ப்புகளை வழங்கக்கூடிய கல்விச் சூழல்களை நாம் எவ்வாறு உருவாக்க முடியும்?

யுனெஸ்கோவின் நிலையான அபிவிருத்தி முன்முயற்சி (2012) தொடர்ச்சியான வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான ஒரு கருத்தியல் கட்டமைப்பை வழங்கியது. இந்த மாதிரி பின்வரும் ஐந்து தூண்களில் கற்றலை ஏற்பாடு செய்கிறது:-

- அறியக்கற்றல் – இந்த உலகில் செயல்படத் தேவையான திறன்கள் மற்றும் அறிவின் வளர்ச்சி எழுத்தறிவு எண் விமர்சன சிந்தனை மற்றும் பொது அறிவை முறையாகப் பெறுதல்.
- செய்ய கற்றல் – தொழில்முறை வெற்றியுடன் இணைக்கப்பட்ட பயன்பாட்டு திறன்களைப் பெறுதல்.
- ஒன்றாக வாழ கற்றுக்கொள்வது – சமூக திறன்கள் மற்றும் பிறருக்கு மரியாதை மற்றும் அக்கறை போன்ற மதிப்புகளின் வளர்ச்சி மற்றும் கலாச்சார பன்முகத்தன் மையைப் பாராட்டுதல்.
- வாழக் கற்றல் – ஒரு நபரின் மனம் உடல் மற்றும் ஆவிக்கு பங்களிக்கும் கற்றல். படைப்பாற்றல் மற்றும் தனிப்பட்ட கண்டுபிடிப்பு, வாசிப்பு, இணையம் மற்றும் விளையாட்டு மற்றும் கலை போன்ற நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட திறன்கள் ஆகியவை அடங்கும்.
- தன்னையும் சமூகத்தையும் மாற்றியமைக்கக் கற்றல் – தனிநபர்களும் குழுக்களும் அறிவைப் பெறும்போது, திறன்களை வளர்த்துக் கொள்ளும்போது, கற்றலின் விளைவாக புதிய மதிப்புகளைப் பெறும்போது, அவை நிறுவனங்கள், சமூகங்கள் மற்றும் சமூகங்களில் நீடித்த மாற்றத்தை உருவாக்குவதற்கான கருவிகள் மற்றும் மனநிலைகளைக் கொண்டுள்ளன.

சமூக மாற்றத்திற்கான முக்கிய கருவி கல்வி என்பதை மறுக்கமுடியாது. எனவே அந்தக் கல்விதான் இன்றைய நெருக்கடி மிகுந்த கொரோனாச் சூழலை எதிர்கொள்ளக்கூடிய வாழக்கை முறைமையை வடிவமைக்க வேண்டும். மக்களுக்கு வழிகாட்டவேண்டும்.

# தனிமைப்படுத்தல் ஊரடங்கு உள்ள இடங்களில் மருந்தகம் உட்பட அனைத்தும் மூட நடவடிக்கை

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவிப்பு



கொழும்பு, ஒக். 13

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள மருந்தகங்கள் மற்றும் அத்தியாவசிய தேவை பொருள்கள் விநியோகிக்கும் மத்திய நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நாளை முதல் எதிர்வரும் வியாழக்கிழமை வரை குறித்த மத்திய நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும் மருந்தகங்கள் மற்றும் அத்தியாவசிய தேவை பொருள்கள் விநியோகிக்கும் மத்திய நிலையங்கள் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பிள்ளையான் விரைவில் சிறையிலிருந்து வருவார்

## பிரசாந்தன் நம்பிக்கை



தமிழ்மக்கள்விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுறை சந்திரகாந்தன், மிக விரைவில் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார் என்று அந்தக் கட்சியின் செயலாளர் பிரசாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். பிரசாந்தன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

சந்திகாந்தன் முதலமைச்சராக இருந்த காலத்தில் எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படக்கூடாது என்பதற்காக குறிப்பாக மேய்ச்சல் தரைக்காக 27 ஆயிரத்து 311 ஹெக்டயர்களை ஒதுக்குவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்மக்கள்விடுதலைப் புலிகள் கட்சியைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளையும் இஞ்சி இஞ்சியாக காணிகளையும் நீர்நிலைகளையும் அளந்து வைத்திருப்பவர் சந்திரகாந்தன் என்பதை மக்கள் நன்றாக அறிவார்கள்.

மேய்ச்சல் தரைக்கான காணிகள் ஒதுக்கப்படும் சூழலில் மாகாண சபைகள் கலைக்கப்பட்டதன் காரணத்தினால் தான் வர்த்தமானியில் பிரசுரிக்கமுடியாமல் போயிருந்தது.

மயிலத்தமடு பகுதிக்கு நாங்கள் நேரடியாகச் சென்று நிலங்கள் தொடர்பில் கவனம் செலுத்திவந்தோம். அங்கு நிலங்கள் அபகரிக்கப்படவில்லை. ஆனால் ஒரு சில இடங்களில் மட்டும் எள்ளுப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவர்களையும் நாங்கள் அகற்றினோம்.

ஆனால் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் இருந்த காலப் பகுதியில்தான், ஏனைய மாவட்டங்களை சேர்ந்த பெரும்பான்மையினர் வந்து நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தும் அதனை அன்றிருந்த மாவட்ட அரசாங்க அதிபர் தடுத்த சம்பவமும் நடைபெற்றது.

பெரும்பான்மையினர் மீண்டும் காணிகளை பிடிப்பதற்கு இடம்கொடுத்தவர்கள் இவர்கள்தான். அன்று அந்த பிரச்சினையைத் தீர்க்க முடியாதவர்கள் இன்று வந்து சந்திரகாந்தன், பெரும்பான்மையினரை குடியேற்றியதாகக் கூறுகின்றனர்.

பெரும்பான்மையினர் கூறியமையை சரியாக மொழிபெயர்ப்பு செய்யாத சூழ்நிலையிலேயே சந்திரகாந்தன் காணிகளைகொடுத்தார் எனக் குறிப்பிடுகின்றனர். - என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# கொரோனா வைரஸுடன் வாழ்வதற்குப் பழகுங்கள்!

## தொற்றுநோயியல் பிரிவு



கொழும்பு, ஒக்.13

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் உலகம் முழுவதும் காணப்படுவதாகவும் அதனை இலங்கையில் மாத்திரம் கட்டுப்படுத்தி முழுமையாக ஒழிக்க முடியாது எனவும் தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய சூழலில் நாம் கொரோனா வைரஸ் உடன் வாழ கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர் -

கொரோனா வைரஸ் ஓர் உலகளாவிய தொற்று நோய். அதன் பரவல் இன்று அல்லது நாளை முடிவடையாது.

இலங்கையில் மட்டும் இதனைக் கட்டுப்படுத்தி சுதந்திரமாக இருக்க முடியாது. எனவே, கொவிட் - 19 தொற்றுநோய் உலகத்தில் இருந்து ஒழிக்கப்படும் வரை நாம் கொவிட் 19 உடன் வாழ பழகிக்கொள்ள வேண்டும்.

முழுமையான ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து சமூக செயற்பாட்டை இடைக்கிடையே நிறுத்துவதன் ஊடாக அதனைக் கட்டுப்படுத்த முடியாது.

கொவிட் - 19 நோயைக் கட்டுப்படுத்துவது முக்கியம், அதே நேரத்தில் சாதாரண வாழ்க்கையை வாழ வேண்டியதும் அவசியம்.

உயர்தர பரீட்சைகள் சுமார் ஒரு மாத காலத்துக்கு நடைபெறும். எனவே, அதற்கு எந்தவித இடையூறும் இல்லாமல் செயற்படுவதை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் பொறுப்புடன் உறுதிப்படுத்த வேண்டும்.

தற்போது தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ள மாணவர்களுக்கு பரீட்சை எழுத விசேட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

எனவே, கொவிட் - 19 அச்சுறுத்தல் காணப்பட்டாலும் மாணவர்கள் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு பரீட்சையை எதிர்கொண்டு வெற்றி பெறுவது சவால் மிக்கது. - என்றார்.

# கொரோனா விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் விநியோகம்



கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்கள் மத்தியில் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தும் வகையில் ஹற்றன் நகர் பகுதியில் மக்களுக்கு துண்டுப்பிரசுரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை திருச்சபை கொழும்பு மறை மாவட்டத்தின் ஏற்பாட்டில் தோட்ட சமூக அபிவிருத்திப் பணியகத்தின் ஊடாக இன்று (திங்கட்கிழமை) இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தோட்ட சமூக அபிவிருத்தி பணியகத்தின் மாவட்ட இணைப்பாளர் என்.நித்தியா, முகாமையாளர் என்.லோகராணி, மஸ்கெலியா பிரதேச சபையின் சுகாதார நிர்வாகி எஸ்.ஆனந்தன் உட்பட உத்தியோகத்தர்கள், இளைஞர்கள் இணைந்து இந்த விழிப்புணர்வு துண்டுப்பிரசுரத்தை மக்களுக்கு வழங்கி வைத்தமையோடு, விழிப்புணர்வு பதாதைகளைக் காட்சிப்படுத்தினர்.

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வது தொடர்பான வழிமுறைகள் அடங்கிய இந்தத் துண்டுப்பிரசுரம், ஹற்றன் நகர் பகுதி, அரச தனியார் பஸ் தரிப்பிடம், டிக்கோயா, பொகவந்தலாவ, மஸ்கெலியா, நோர்வூட் ஆகிய பிரதான நகரங்கள் போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பொது மக்களுக்கான சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக். 13

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பொதுமக்களுக்கான சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை நாரஹென்பிட்டி, வேரஹெர அலுவலகங்கள் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஊரடங்கு அமுலில் உள்ள பகுதிகளில் வாகன அனுமதிப்பத்திர புதுப்பித்தல் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் காலாவதியாகும் வாகன அனுமதிப்பத்திரங்களை மீள புதுப்பிக்கும்போது, அதற்கென அபராதத் தொகை விதிக்கப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் கொரோனா பரவல் நிலைமையைக் கருதிற்கொண்டு, குடிவரவு - குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆள்பதிவுத் திணைக்கள பொதுமக்கள் சேவைகள், எதிர்வரும் வாரம் இடம்பெற என ஏற்கனவே அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 14 வயது சிறுமிமீது பலாத்காரம் 21 வயது இளைஞர் கைதானார்!

## மட்டக்களப்பு சித்தாண்டியில் சம்பவம்

மட்டக்களப்பு - சித்தாண்டி பிரதேசத்தில் 14 வயது சிறுமி மீது பாலியல் வன்கொடுமை மேற்கொண்ட குற்றச்சாட்டில் 21 வயதுடைய இளைஞனை ஏறாவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆந்த சிறுமி வீட்டில் தனிமையில் இருந்தபோது, அவரது மாவடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது காதலன், கடந்த 8 ஆம் திகதி பாலியல் வன்கொடுமை மேற்கொண்டார் என சிறுமியின் உறவினர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து அந்த இளைஞனை கைது செய்த பொலிஸார் பாதிக்கப்பட்டார் எனக் கூறப்படும் சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# 116 கிலோவுடையை கேரளாக் கஞ்சாப் பொதிகள் மாதலில் கடல் பகுதியில் கடற்படையினரால் மீட்பு



(எஸ். நிதர்ஷன்)

யாழ். மாதகல் கடல் பகுதியில் மர்மமான முறையில் மிதந்து வந்த 116 கிலோ கேரளாக் கஞ்சா கடற்படையினரால் இன்று அதிகாலை மீட்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

காங்கேசன்துறைகே கடற்படையினர் இன்று அதிகாலை கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது மாதகல் கடல் பகுதியில் மர்மப் பொதிகள் மிதந்து வருவதை அவதானித்தனர்.

மிதந்து வந்த மர்மப் பொருள்களைக் கடற்படையினர் சோதனை யிட்ட போது அதில் இருந்து கேரளாக் கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதைக் கடற்படையினர் மீட்டு காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப் படைத்துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட பொதிகள் 116 கிலோ எடையுடைய கேரளாக் கஞ்சா என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸார் மேல திக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வடக்கில் புலமைப்பரிசில் பரீட்சையில்

# 488 மாணவர்கள் தோற்றவில்லை

(ந.லோகதயாளன்)

இலங்கையில் நேற்று நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 18 ஆயிரத்து 387 மாணவர்கள் விண்ணப்பித்திருந்த போதி லும் 488 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற வில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட் டத்தில் 4 ஆயிரத்து 897 மாணவர்கள் விண் ணப்பித்திருந்த நிலையில் 4 ஆயி ரத்து 818 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இதேபோன்று வவு னியா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 46 மாண வர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் 3 ஆயிரத்து 14 மாணவர்கள் பரீட்சைக் குத் தோற்றியுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 570 மாணவர்கள் விண்ணப்பித் திருந்த நிலையில் 2 ஆயிரத்து 531 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 439 மாணவர்கள் விண்ணப் பித்திருந்த நிலையில் 2 ஆயிரத்து 325 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள் ளனர். மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 107 மாணவர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் ஆயிரத்து 961 மாணவர்கள் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

இவற்றின் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் 146 மாணவர்களும், முல் லைத்தீவு மாவட்டத்தில் 114 மாணவர்க ளும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 157 மாணவர்களும், கிளிநொச்சி மாவட்டத் தில் 39 மாணவர்களும், வவுனியா மாவட் டத்தில் 32 மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றவில்லை எனக் கண்டறியப்பட் டுள்ளது.



கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் சுகா தார வழி காட்டல்களுடன் பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் இன்று ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகள் ஆரம்ப மாகின.

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)

# வவுனியா நகரில் சுகாதார வழிமுறைகளின்றி பாதுகாப்பற்ற முறையில் நடமாடும் யாசகர்கள்

## கொரோனாத் தொற்று அச்சத்தில் வர்த்தகர்கள்

வவுனியா, ஒக்.12

வவுனியா நகரப் பகுதியில் யாசகர்கள் பலர் சுகா தார நடைமுறைகளைப் பின்பற்றாது பாதுகாப் பற்ற முறையில் நடமாடுவதால் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படும் என்ற அச்சத்தில் வர்த்தகர்கள் உள் ளனர்.

வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தந்த யாசகர்கள், வர்த்தகர்கள் மற்றும் நகரப்பகுதிக்குச் செல்வோரிடம் யாசகம் கேட்கின்றனர். அத்துடன் வவுனியா நகரம் மற்றும் வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களின் முன்னால் இரவு வேளைகளில் உறங்குகின்றனர்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது பாதுகாப் பற்ற முறையில் யாசகர்கள் நடமாடுவதாலும், வர்த் தக நிலையங்களின் முன்னால் உறங்குவதாலும் கொரோ னாத் தொற்று ஏற்பட்டுவிடும் என அச்ச நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவித் துள்ளனர்.

இது தொடர்பில் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் வவுனியாப் பொலிஸார் ஆகியோருக்குத் தெரியப்படுத் தியும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை எனவும், யாசகர்கள் கடைகளின் முன்னால் தங்குவதால், தாம் தினமும் கடைகளின் முன்னால் கிருமி நீக்கம் செய்ய வேண்டியுள்ளது எனவும் வர்த் தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (100)

# முல்லைத்தீவில் ஊடகர்களைத் தாக்கி வாக்குமூலம் பெற்ற வன்முறைக் குழு!

## வெளியாகின அதிர்ச்சித் தகவல்கள்



முல்லைத்தீவு, ஒக்.13

மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட முறிப்புக் கிராமத்தில் மாபியாக்கள் போல் செயற்படும் நான்கு பேர் கொண்ட வன்முறைக் குழு ஒன்று ஊடகவியலாளர்கள் இருவரைக் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தியதுடன் அவர்களிடம் இருந்த சொத் துக்களையும் அபகரித்த சம்பவம் இன்று பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதா வது:-

முறிப்பு பகுதியைச் சேர்ந்த நபர் ஒரு வர் தலைமை யிலான குறித்த குழு சட்ட விரோத மரக்கடத்தல் நட வடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. அந்தப் பகுதியில் காணப்படுகின்ற தேக்கு மற்றும் முதிரை மரங்களைக் கடத்தும் நடவடிக்கையை வழமையாகக் கொண்டு செயற்படும் அந்தக் குழு அடிதடி வன்முறையில் ஈடுபட்டு வரு கின்றது.

இலங்கை தேசிய மரக்கூட்டுத்தா பனம் ஒன்றின் உப ஒப்பந்ததாரராகிய பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுக்கான மரம் ஏற்றும் நடவடிக்கையை மேற்கொண்டு வரும் குறித்த குழு தமக்குக் காப்பரணாக குறித்த நிறுவனத்தையும் மரக்கூட்டுத் தாபனத்தையும் பயன்படுத்தி வந்திருக்கின்றது.

நீண்டகாலமாகக் குறித்த மரக்கடத் தல் தொடர்பில் குமுழமுனை மற்றும் முறிப்பு பகுதி மக்களால் பொறுப்பு வாய்ந்த தரப்புக்களின் கவனத்துக்குக் கொண்டு செல் லப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என்று தெரியவருகின்றது.

அந்தக் குழுவுக்குத் தலைமை தாங் கும் நபர் தேக்கு மரத்தினாலான மர வீடு ஒன்றை அமைத்து வருகின் றார் என வும், அதனையாவது வெளியில் கொண்டு வருமாறும் முறிப்பு மற்றும் குமுழமுனை மக்கள் ஊடக வியலாளர்களான குமணன் மற்றும் தவசீலன் ஆகி யோரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர் .

இதையடுத்து இன்று பிற்பகல் சென்ற ஊடகவியலா ளர்கள் இருவரும் சம்பவம் தொடர்பில் கேள்வி எழுப்ப முற்பட்டபோது குறித்த நபரும் அவருடைய கையாட்கள் மூவரும் வாச்சி, கொட்டன், தடிகள், இரும்புக்கம்பிக ளால் இருவரையும் கடுமையாகத் தாக்கி பணயக் கைதி களாக்கியிருக்கின்றனர்.

பின்னர் ஊடகவியலாளர்களின் தொலைபேசி மற் றும் கமராக்களில் இருந்த காட்சிப் பதிவுகளை அழிக் கவைத்துள்ளமையுடன், அவர்களிடம் இருந்த தங்க நகைகள், 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் என்ப வற்றையும் கொள்ளையிட்டிருக்கின்றனர். ஊடகவிய லாளர்கள் இருவரையும் திருடர்கள் என்று தெரிவுக்கு மாறு நிர்ப்பந்தித்து காணொளி ஒன் றையும் பதிவு செய்தி ருக்கின்றனர். அதன் பின்னரே அவர்கள் விடுவிக்கப் பட்டிருக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் முறையிடுவதற்காக ஊடகவியலாளர்கள் இருவரும் சென்றிருக்கின்றனர்.

குறித்த தாக்குலாளிகளுக்கு அதிகாரத் தரப்பு டன் நெருக்கமான உறவுகள் இருக்கின்றன எனவும், தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை என வும் பாதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# மாணவியிடம் அநாகரிகமாக நடந்தவருக்கு 7 வருடச் சிறை

(அப்துல்சலாம் யாசீம்)

பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த 16 வயதுக்குக் குறைந்த மாணவிக்கு சாரத்தை உயர்த்தி காட்டிய குற்றவாளிக்கு 7 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் இத்தீர்ப்பினை நேற்று வழங்கியுள்ளார்.

இவ்வாறு 7 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளவர் திருகோணமலை, மொரவெவ,குணவர்தனபுர பகுதியைச் சேர்ந்த சானக்க என்றழைக்கப்படும் கிறிஸ்தோம்பூ பதுகே சுரங்க சில்வா (30வயது) எனவும் தெரியவருகின்றது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 10ஆம் திகதி வரை உள்ள கால பகுதியில் மொரவெவ சிங்கள மகா வித்தியாலயத்திற்கு கல்வியைக் கற்பதற்காக சென்ற மாணவிக்கு சாரத்தை உயர்த்தி காட்டினார் என அம்மாணவியின் வகுப்பாசிரியையினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் 2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மூன்றாம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குறித்த எதிரிக்கு எதிராக குற்றப்பகர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் குறித்த நபருக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் இரண்டு குற்றச்சாட்டுக்களிலும் இவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதையடுத்து அவருக்கு நேற்றைய தினம் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தனது தீர்ப்பினை திறந்த நீதிமன்றில் வாசித்துக் காட்டினார்.

இதேவேளை பாரதூரமான பாலியல் குற்றச்சாட்டை புரிந்த குற்றவாளிக்கு 7 வருட கடூழிய சிறை தண்டனை வழங்குமாறும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இரண்டு லட்சம் ரூபாய் நஷ்டஈடு செலுத்துமாறும், குறித்த பணத்தை செலுத்த தவறினால் ஒரு வருட கால கடூழிய சிறை தண்டனை அனுபவிக்ல்குமாறும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை அரசுக்கு 25,000 ரூபாய் தண்டம் செலுத்துமாறு அந்த பணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் ஆறு மாத காலம் கடூழிய சிறை தண்டனை வழங்குமாறும் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

## அக்போபுரவில் ஊடகவியலாளரை தாக்கிய மூவருக்கு விளக்கமறியலில்

அக்போபுர பிராந்திய ஊடகவியலாளரை தாக்கிய மூவரை நாளை 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற பதில் நீதிவான் முகம்மட் பரூஸ் நேற்று உத்தரவிட்டார்.

அக்போபுர, சீனிஆலை பகுதியைச் சேர்ந்த 24, 28 மற்றும் 20 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அக்போபுர பகுதியில் விபத்தொன்று ஏற்பட்டதை அறிந்து செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை மூன்று சந்தேக நபர்களும் தாக்கியமையோடு அவரின் ஒலிப்பதிவு கருவியையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.பிராந்திய ஊடகவியலாளரினால் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய மூவரை கைது செய்து கந்நளாய் நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த போதேஅவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எனக்கு நீதியைப்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு ஏமாற்றமளிக்கும் உண்மை யாதெனில், நான் ஒரு குற்றமும் இழைக்காமல், 169 நாட்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் தடுப்புக் காவலில் இருந்த காலப்பகுதியில் அனுபவித்த பேரழிவுகரமானதொரு வாழ்க்கைக்குப் பிறகும், குற்றமற்றவனாக உறுதிப்படுத்தப்பட்டு நான் விடுவிக்கப்பட்டேன். அரச மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், எனது விடுதலையை அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்துகிறார்கள் என்பது கவலையான விடயமாகும்.

ஆகையால், எனது விடயத்தில் நீங்கள் தலையிட்டு, நான் எப்போதும் அரசியல் மற்றும் பயங்கரவாதத்திலிருந்து விலகிச் செல்லும் உறுதியுடன் இருக்கும் ஒரு நபர் என்பதால், எனக்குக் கிடைக்க வேண்டிய நீதியைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் என நான் நம்புகின்றேன். அரசியல் மற்றும் சமூகவாத காரணங்களால் என்னை மீண்டும் கைது செய்வ தற்கான கோரிக்கைகள் திட்டமிடப்பட்டு, அரங்கேற்றப்படுகின்றன என்பதையும் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன் – என்றுள்ளது.

## வவுனியாவை சேர்ந்த சிறுவன் லண்டனில் விபத்தில் சாவு!



வவுனியா, கோவில்குஞ்சுக்குளத்தை பூர்விகமாகக் கொண்டுள்ள லண்டனில் வசித்துவரும் சிறுவன் விபத்தில் உயிரிழந்துள்ளான்.

இந்தச் சிறுவன், நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) ஏழு மணியளவில் தனது தாயுடன் நகர்ப்பகுதிக்குச்சென்றிருந்தவேளை, பாதசாரி கடவையைக் கடக்க முற்பட்டபோது வேகமாக வந்த கார் சிறுவனை மோதித் தள்ளியது.

இந்நிலையில், அந்த விபத்தில் சிறுவன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி அவனட உயிரிழந்தான்.

லண்டன் கேய்ஸ் பகுதியில் தனது பெற்றோருடன் வசித்து வரும் சசிகரன் அகர்வின் (வயது – 4) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை யோகரட்ணம்



(சண்டிலிப்பாய் சீரணி நாகபூசனி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபை உறுப்பினர்)

**பிறப்பு**
**09.09.1948**

**இறப்பு**
**12.10.2020**



**சீரணி சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை யோகரட்ணம் அவர்கள் (12.10.2020) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பொன்னையா செல்லத்துரை - கனகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், ரஞ்சினி தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்மலிங்கம் புலோனிசை அவர்களின் அன்பு மருமகனும், றுபேஸ்குமார், கிசோக்குமார், துஸ்யந்தி, றஜித்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தாரணி, காஞ்சனா, சிறிஸ்கந்தராஜா, மகிபா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற பாலரட்ணம், கோபாலரட்ணம் மற்றும் செல்வரட்ணம், காலஞ்சென்ற குணரட்ணம், சபாரட்ணம், செல்வராணி, செல்வதேவி, நவரட்ணம் ஆகியோரின் பாசமிகு அண்ணனும் சுசிலா தேவி, ஜெயதேவி, சிவானந்தன், யோகானந்தன், மோகானந்தன் ஆகியோரின் மைத்துனரும் லோசித், பிரித்திகா, மிதுன், அபிசா, அஸ்மிதா, அனிஸ்கா, ரோகித், நித்திகா, மித்திரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.**

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிப்பிலி மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும்.**

தகவல்
மனைவி. யோ.றஞ்சினிதேவி.
021 225 1078

# சட்டவிரோத ஆயுத தொழிற்சாலை அம்பாறையில் நேற்று முற்றுகை!

## முன்னாள் போராளி உட்பட மூவர் கைது

அம்பாறை – திருக்கோவில் பிரதேசத்தில் இயங்கி வந்த சட்டவிரோத துப்பாக்கி தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றை, தேசிய புலனாய்வுப் பிரிவினர் முற்றுகையிட்டுள்ளனர்.

மேலும், துப்பாக்கி தயாரிப்பில் ஈடுபட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் உட்பட 3 பேரை கைது செய்த தேசிய புலனாய்வு பிரிவினர், 10 துப்பாக்கிகளை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தேசிய புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திருக்கோவில் பிரதான வீதியிலுள்ள அம்மன் கோயிலுக்கு முன்னால் இயங்கி வரும், லேத் மெசின் கடையை முற்றுகையிட்டனர். அங்கு திரட் வகை உள்ளூர் துப்பாக்கி தயாரிப்பில் ஈடுபட்டு வந்த 60 வயதுடைய தம்பிலுவிலைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்தனர்.

இதனையடுத்து குறித்த துப்பாக்கி தயாரிப்பான பட் எனப்படும் பாகமான துப்பாக்கியின் மரத்திலான பிடியை தயாரித்து வந்த, தச்சு தொழிலாழியான தம்பிலுவிலைச் சேர்ந்த 40 வயதுடைய முன்னாள் போராளியான ஒருவரையும், தயாரிக்கப்படும் துப்பாக்கிகளை விற்பனை செய்து வந்த காஞ்சரம் குடாவைச் சேர்ந்த ஒருவர் உட்பட 3 பேரையும் கைது செய்தமையுடன் அங்கிருந்து தயாரிக்கப்பட்ட 10 துப்பாக்கிகளையும் மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை திருக்கோவில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அவர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING [CODL]

### VACANCY: Post of Moodle Coordinator (On Contract Basis) [One Year]

Application are invited by me up to 06.11.2020 from suitably qualified persons for the post of Moodle Coordinator **on contract basis** for one year to handle Moodle Learning Management System in the Centre for Open and Distance Learning [CODL], University of Jaffna.

**Requirements**:

The Candidate should possess the followings:

- ★ A relevant Degree from a recognized University such as B.Sc in Computer Science or IT related Degree

**or**

- ★ Higher National Diploma in Computer Science from a government institution or equivalent

**and**

- ★ Excellent written and verbal communication skills in English
- ★ Experience in Online Learning methods and Moodle LMS at the Administrative Level
- ★ Highly organized and detail oriented personality.
- ★ Ability to self-direct and manage time.
- ★ A demonstrated ability to plan and manage complex projects.
- ★ Knowledge in windows/Unix programming.
- ★ Knowledge in html codes, Data base programming scripting languages [php/asp] is desirable.

Salary: Rs. 56,800/- (fixed) per month.

Age: Below 45 years

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants should deposit Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna Account No. 162-1-001-6-0000880.**

Only applications sent on the specified form will be accepted. **(Please annexed copies of relevant documents)**. The envelope containing the duly filled application form must bear **"Post of Moodle Coordinator-Centre for Open and Distance Learning"** on its top left hand corner and either be hand delivered or sent under registered post to reach the Office of the Registrar, P.O.Box 57, Thirunelvely, Jaffna **on or before 06.11.2020.**

REGISTRAR
University of Jaffna,
Jaffna.
12.10.2020.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி – 1988.08.21
மதம் – இந்து V
நட்சத்திரம் – அனுசம்
பாவம் – 48
கல்வி – M.B.B.S
தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor, Engineer

மணமகள் விவரம்
பிறந்த திகதி – 1979.12.05
மதம் – இந்து V
நட்சத்திரம் – திருவாதிரை 1
பாவம் – 53 1/2
செவ்வாய் – 8இல் 32 புள்ளி
கல்வி – A/L
தொழில் – UK PR விவாகரத்து
எதிர்பார்ப்பு – UK மணமகன் தேவை

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
•பிரான்ஸ் •ஜெர்மனி
•டென்மார்க்
•நெதர்லாந்து
•இத்தாலி
•சுவிஸ்
1150/= Kg



எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம்
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
0768226240

A/L தொழில்நுட்பப் பிரிவு
T.P - 077 170 3549
S.Shakthy B.Sc(Hons), M.Sc
076 170 3542
ZOOM ONLINE CLASSES
இலவச வகுப்புகள்
A/L 2022
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
விசை
திங்கள் முதல் வெள்ளி வரை 7.30 - 8.30 pm
Meeting ID - 509 028 7747
Passcode - TWSFT2020
A/L 2022 பிரிவைச் சேர்ந்த எவரும் பங்குபற்றலாம்.

A/L தொழில்நுட்பப் பிரிவு
T.P - 077 170 3549
S.Shakthy B.Sc(Hons), M.Sc
076 170 3542
ZOOM ONLINE CLASSES
இலவச வகுப்புகள்
A/L 2021
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
தரம் 12 இற்கான SFT பாடங்களின் Revision and Past Paper Discussion
திங்கள் முதல் வெள்ளி வரை 5.00 - 6.00 am
Meeting ID - 509 028 7747
Passcode - TWSFT2020
A/L 2021 பிரிவைச் சேர்ந்த எவரும் பங்குபற்றலாம்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.10.2020 இல் வெளியிடப்பெற்றது.